REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 செப்டெம்பர் 28 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
வரு. 92 இல. 232 | Saturday 28, September, 2024 | 12பக்கங்கள் | 50/-

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து



இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கு அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்து தெரிவித்துள்ளார். இலங்கை மக்கள் தாம் பெருமைப்படக்கூடிய சுதந்திரமான, 06

20 வருடங்களாக மூடியிருந்த

## கொழும்பின் சில வீதிகள் மீண்டும் திறப்பு

**ஜனாதிபதி அநுர குமார பணிப்பு**



கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையை அண்மித்த பகுதியில் இதுவரை வீதி தடைகளால் மூடப்பட்டிருந்த வீதிகளை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பணித்ததை தொடர்ந்து 06

**ஈஸ்டர் தாக்குதல்; இழப்பீடு செலுத்தவில்லை**

## நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றப்பத்திரம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக செலுத்த வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்ட 74 மில்லியன் ரூபாவை செலுத்த தவறியமைக்காக அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஏழு நீதிபதிகள் அடங்கிய குழாம், ஒக்டோபர் ஏழாம் திகதி நிலந்த ஜயவர்த்தன நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. 06

# அரச நிறுவனங்களில் ஊழல், மோசடிகளுக்கு இனி இடமில்லை

**கண்டறிய விசேட வேலைத்திட்டம் தயார்**



**அரச நிதி வீண் விரயம், துஷ்பிரயோகம் குறித்து அரசாங்கம் மிக உன்னிப்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்**

அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்களை கண்டறிய நிறுவன ரீதியான குழுக்களை நியமிக்கப் போவதில்லை. அதற்கான ஒழுங்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று தெரிவித்தார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்குட்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று 06

மீனவர்களுக்கு எரிபொருள் நிவாரணம்

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு டக்ளஸ் நன்றியுடன் வாழ்த்து



கடற்றொழில் அமைச்சராக செயற்பட்ட போது தன்னால் முன்மொழியப்பட்டு அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அனுமதி அளித்துள்ளமைக்கு நன்றி தெரிவித்துள்ள முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதிக்கு தனது வாழ்த்தையும் தெரிவித்துள்ளார். கடற்றொழிலாளர்களால் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருளுக்கு 06

## கடவுச்சீட்டு கொள்வனவு தீர்மானத்துக்கு தடை

**மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு**



இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து 7 இலட்சத்து 50 ஆயிரம் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்காக கடந்த அரசாங்கத்தில் மேற்கொண்ட அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

எபிக் லங்கா தனியார் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவை பரிசீலனை 06

## ஜனாதிபதியாக அநுர குமார வந்ததால் மாத்திரமே பதவியை ஏற்கிறேன்



பருத்தித்துறை விசேட நிருபர்

ஊழலற்ற மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கு புதிய ஜனாதிபதி கிடைத்தமை இறைவனின் செயல். ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க வந்ததால் மாத்திரமே தான் இந்த பதவியை பெற்றுக் 06

## பதில் பொலிஸ் மாஅதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்



அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கமைய பதில் பொலிஸ் மாஅதிபராக பிரியந்த வீரசூரிய நேற்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் இவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் 06

## சர்வதேச புத்தக கண்காட்சி ஆரம்பம்



சர்வதேச புத்தக கண்காட்சி நேற்று பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புத்தக கண்காட்சி எதிர்வரும் ஒக்டோபர் 27ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இளையோருக்கு இடமளித்து

## பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட போவதில்லை



இளையோருக்கு இடமளித்து இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்றும் தனது அரசியல் சேவை தொடருமென்றும் தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

துடிப்புமிக்க இளைஞர்களுக்கு வழிவிட்டு அரசியலில் முதிர்ச்சி உள்ளவர்கள் அவர்களுக்கு பக்கபலமாக நின்று வழிகாட்ட வேண்டும் என்பதே தனது விருப்பமாகும் எனவும் அவர் கூறினார். 06

மக்களுக்கு நிவாரணம் வழங்க

## மின்சார கட்டணத்தை குறைக்க எதிர்பார்ப்பு



மக்களுக்கு அதிகபட்ச நிவாரணம் கிடைக்கும் வகையில் மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டுமென்பதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகுமென, இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மின்சாரக் கட்டண குறைப்பு தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் இது தொடர்பாக அறிக்கையை இலங்கை பொது 06

**பொது நிர்வாக அமைச்சு**

## அரசாங்க வீடுகள், பங்களாக்களை ஒப்படைக்குமாறு அறிவிப்பு

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் அந்தந்த அமைச்சு பதவிகளை வகித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்திய அரசாங்க வீடுகள் மற்றும் பங்களாக்களை உடனடியாக மீள ஒப்படைக்குமாறு, அரச பொது நிர்வாக அமைச்சு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களான சுமார் 15 பேருக்கு அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பங்களாக்களை ஒப்படைப்பது தொடர்பாக தற்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, அந்த அமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் சில 06



03

இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

**இந்திய பிரதமர் மோடியிடம் தமிழக முதல்வர் வேண்டுகோள்**



03

**வட்டி வீதங்களை அதே நிலையில் பேண மத்திய வங்கி தீர்மானம்**



03

ஒக்டோபர் 10ஆம் திகதி

**கப்ரால் உட்பட 5 பேருக்கு நீதிமன்றில் ஆஜராக உத்தரவு**

மன்னாரில் புதிய

## மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரிக்கை

**ஜனாதிபதிக்கு முன்னாள் எம்.பி. ரிஷாட் கடிதம்**



மன்னார் பிரதான வீதியில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலைய அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை 06

**எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில்**

## நஸீர் அஹமட் தனித்து களம் இறங்க தீர்மானம்



கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவரது ஜனநாயக ஐக்கிய முன்னணி சார்பில் களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், முன்னாள் சுற்றாடல் அமைச்சர் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் பதவிகளை வகித்த நஸீர் அஹமட், கிழக்கு மாகாணத்தை பூர்வீகமாக 06

உள்ளூர் தொழிற்சாலைகளில் நிதி நெருக்கடி

## வெள்ளை சீனி இறக்குமதியை மட்டுப்படுத்துமாறு கோரிக்கை



உள்ளூர் சீனி உற்பத்தி தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள கடும் நிதி நெருக்கடி காரணமாக நாட்டுக்குள் வெள்ளை சீனி இறக்குமதியை மட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் சீனி உற்பத்தி தொழிற்சாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கெனவே இலாபத்தில் இயங்கி வந்த 4 உள்ளூர் சீனி உற்பத்தி தொழிற்சாலைகளில் தற்போது கடும் நிதி நெருக்கடியால் நீடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சீனி உற்பத்தி தொழிற்சாலை நிர்வாகம் கூறியுள்ளது. இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனிக்கு 06

## வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலய வீதிகளை திறக்குமாறு கோரிக்கை

**ஜனாதிபதி அநுர குமாரவுக்கு முன்னாள் எம்.பி. அங்கஜன் கடிதம்**



பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதியில் பாதுகாப்பு வலயத்திலுள்ள 4 வீதிகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் 06

# ஸ்ரீ லங்கா ஐ.காங்கிரஸ் தனித்து போட்டி

## விண்ணப்பிக்குமாறு கட்சி வேண்டுகோள்

பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா ஐக்கிய காங்கிரஸ் தனித்து சுயேட்சையாக அல்லது வேறு கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளது.

பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா ஐக்கிய காங்கிரஸ் சார்பாக போட்டியிட விரும்புவோர் தமது பெயர், முகவரி, தேர்தல் மாவட்டம் போன்றவற்றை குறிப்பிட்டு தமது அடையாள அட்டை பிரதியை இணைத்து அனுப்பும்படி ஸ்ரீ லங்கா ஐக்கிய காங்கிரஸ் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

# நகர்வலம்



அசாதாரண சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுத்து ஒப்படைத்தமைக்கு நன்றிக் கடனாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவர் மௌலவி சதீக் (முப்தி) கட்சி சார்பாகவும் நாட்டு மக்களின் சார்பாகவும் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

பொதுத்தேர்தலில்

# அனைத்து மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட தீர்மானம்

## பிரபா கணேசன்



பொதுத் தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடுவதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இன்று இருக்கும் தேசிய கட்சிகள் ஊழல்வாதிகளுக்கு இடம் கொடுத்திருக்கின்றார்கள்.

மக்கள் பணத்தை கொள்ளை அடிப்பவர்களுக்கு இடம் கொடுத்திருக்கின்றார்கள். இதன் அடிப்படையில் மக்கள் தேசிய கட்சிகளுக்கு வாக்களிக்கப் போவதில்லை. மாறாக புதிய முகங்களை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

ஊழலற்ற நேர்மையான அரசியல்வாதிகளை தேடுகின்றார்கள். இதனடிப்படையிலேயே இந்த தேர்தலில் 22 மாவட்டங்களிலும் நாங்கள் போட்டியிட இருக்கின்றோம்.

எதிர்வரும் தேர்தலில் புதிய சக்தியாக எழுச்சி பெற எங்கள் வேலைத் திட்டங்கள் அமைந்திருக்கின்றன. எவரும் எதிர்பாராத வகையில் எமது வெற்றி அமையவுள்ளது. தமிழ்,சிங்கள,முஸ்லிம் என பல வேட்பாளர்கள் களமிறங்க தயாராகவுள்ளனர். நேர்மையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எங்களுடன் இணைந்து இருக்கின்றார்கள்.

தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் நாட்டின் புதிய அரசியல் பாதையில் பயணிப்பார்கள் என அவர் தெரிவித்தார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான பதவி நிலைகளில் மாற்றங்கள்





ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியவற்றின் பிரதான பதவி நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி புதியவர்களை அப்பதவிகளுக்கு நியமிக்க அதன் தலைவரும் முன்னாள் எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கரும், 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளராக கேகாலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம்மும், ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்டத் தலைவர் பதவிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில்

# ரூ.05 கோடி செலவில் இறுதி சடங்கு மண்டபம்

(திறப்பனை தினகரன் நிருபர்)



அநுராதபுரம் மாநகர சபையினால் ரூ. 05 கோடி செலவில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள இறுதி சடங்கு மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள இறுதிச் சடங்கு மண்டபத்துக்கு 'வாழ்க்கை அறை' என பெயரிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப்பணிகளை ஓராண்டுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன, ஆளுநர் செயலாளர் விஜய வனசிங்க, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் காமினி சேனாரத்ன, சபை செயலாளர் நிஷாந்த ரோய், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சமன் குமார ஜயலத், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயானந்தா மற்றும் அரசஅதிகாரிகள், வர்த்தக சபை அங்கத்தவர்கள், சட்டத்தரணிகள், சங்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அதிகாரிகள் குழுவினர், சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழக அமைச்சர் மா சுப்பிரமணியினால் பாராட்டு விழா





இனிய நந்தவனம் பவுண்டேஷன் தலைவர் சந்திரசேகரன் தமிழக அமைச்சர் மா சுப்பிரமணியனால் அண்மையில் கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். விஜிபி உலகத்தமிழ் சங்கம், கவிதை உறவு மாத இதழ் என்பன இணைந்து இவ்விருது வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இதனை பாராட்டி கௌரவிக்கும் முகமாக இனிய நந்தவனம் வாசகர் வட்டமும், திருச்சி ஹனி பீ ரோட்டரி சங்கமும் இணைந்து நேற்றுமுன்தினம் திருச்சிராப்பள்ளி பிரீஸ் ரெசிடென்சியில் பாராட்டு விழாவொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இனிய நந்தவனம் கௌரவ ஆலோசகர் றொட்டேரியன் Aks, Dr சீனிவாசன் தலைமையில் நடந்த விழாவில் திருச்சிரப்பள்ளி ஜமால் முகம்மது கல்லூரியின் தமிழாய்வுத் துறை தலைவர் பேராசிரியர் அ சையத் ஜாகிர் ஹசன், பேராசிரியர்செல்வராஜ், றொட்டேரியன் அனிதா டேவிட், கவிஞர் ம. திருவள்ளுவர். பேராசிரியர் சந்திரசேகரன், கல்வியாளர் இரா.ஜெயலட்சுமி, உளவியல் ஆலோசகர் லட்சுமி நந்தகுமார், தொழிலதிபர் பிரபாகரன் மற்றும் கல்வியாளர் மருதநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத்துக்கு வாழ்த்து



புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு அதிவணக்கத்துக்குரிய சந்துரு பெர் னாண்டோ வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 9வது நிறைவேற்றுஅதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்ட அநுரகுமார திசாநாயக்கவுக்கு அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் சார்பில் அதன் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இந்தத் தேர்தல் இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தேர்தலாகும். அமைதியான நேர்மையான முறையில் நடந்து முடிந்த தேர்தலானது ஒன்றுபட்ட இலங்கை மக்கள் எதிர்பார்த்த மாற்றம் நடந்தேறியிருப்பது ஜனநாயகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை தொடர்ந்து ஆசிர்வதிப்பாராக. ஜனாதிபதியுடன் பிரதமராக நியமிக்கப்பட்ட ஹரிணி அமரசூரியவுக்கும் நாட்டுக்கும் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற வாய்ப்பு கிடைத்துள்ளது. அவரையும் ஆண்டவர் ஆசிர்வதிப்பாராக.

இவர்களுடன் அமைச்சர் விஜித ஹேரத்தும் இந்த கிடைத்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்தி நாட்டு மக்களுக்கு சிறப்பான சேவையாற்றுவார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அவரையும் ஆண்டவர் ஆசிர்வதிப்பாராக.



வடமத்திய மாகாண ஆளுநராக வசந்த குமார விமலசிறி வடமத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (27) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டபோது... (படம் :அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# லெபனானில் இலங்கையர் பாதுகாப்பாகவே உள்ளனர்

## இலங்கை தூதரகம் அறிவிப்பு

லெபனானிலுள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக இருப்பதாக அங்குள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக லெபனான் இலங்கை தூதுவர் கபில ஜயவீர தெரிவிக்கையில்,

லெபனானிலுள்ள இலங்கையர்களுடன், தூதரகம் நெருங்கிய தொடர்பில் இருப்பதாகவும் சுமார் 7,600 பேர் லெபனானில் பணிபுரிந்து வருவதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் அந்நாட்டின் தென்பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்

கடந்த சில நாட்களுக்கு முன்னர், லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா அமைப்பை குறிவைத்து, நாட்டின் வடக்குப் பகுதிகளில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.இந்நிலையில் மோதல் இடம்பெற்ற பிரதேசங்களில் இலங்கையர்கள் தொழில் புரியவில்லை எனவும் அவர் கூறினார்.

# சமய, சமூக சேவையாளர் அருளானந்தன் காலமானார்



பிரபல வர்த்தகரும் சமய, சமூக சேவையாளருமான S.T.S. அருளானந்தன் J.P நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார், கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர் சபையின் தலைவராகவும் அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றின் துணைத் தலைவராகவும் விளங்கி சிவப்பணிகள் ஆற்றியவர்.

லீலா குறுப், றம்சன் HARDWARE, GREEN LANDS HOTEL, CEYLON HARDWARE ASSOCIATION ஆகியவற்றின் தலைவராகவும் விளங்கி வந்தவர். கதிர்காமம் தெய்வானை அம்மன் தேவஸ்தான நிர்வாகக் குழுவிலும் FEDERATION OF CHAMBER OF COMMERCE இலும், NATIONAL ARBITRATION BOARD இலும் அங்கத்தவராகச் சேவையாற்றி வந்தவர். அன்னார், கொழும்பு இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜன கல்லூரிகளின் பழைய மாணவராவார். இவர் சிந்தனைச் சிற்பச் செல்வர் லீலா சின்னத்துரையின் புதல்வரும் செனட்டர் T. நீதிராஜாவின் மருமகனுமாவார்.

# பஸ் மோதி விபத்து ; வயோதிப பெண் பலி



கொழும்பு கண்டி வீதியிலுள்ள அம்பேபுஸ்ஸ பிரதேசத்தில் நேற்று முன்தினம் (26) பஸ் ஒன்று மோதியதில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக வரக்காப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது காயமடைந்த வயோதிபப் பெண் வரக்காப்பொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேபுஸ்ஸ, வரக்காப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வரக்காப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆமை வைத்திருந்த சந்தேகநபருக்கு அபராதம்

ஆமை ஒன்றை தன்வசம் வைத்திருந்த நபரொருவருக்கு, காலி பிரதான நீதவான் இசுரு நெத்திகுமார, 35,000 ரூபாய் ஆபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

காலி கலேகன பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய ரணேபுர ஹேவகே அஜித் என்ற நபரிடம் 4 கிலோ எடையுடைய ஆமை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்டக்கப்பட்ட ஆமை ஹிக்கடுவ வனஜீவராசிகள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையின்போது தனது வீட்டுத் தோட்டத்திலுள்ள குளமொன்றில் இனப்பெருக்கம் செய்வதற்காக இந்த ஆமையை கொண்டு செல்வதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், மேலதிக விசாரணைகளில் இந்த ஆமையை இறைச்சிக்காக விற்பனை செய்ய விருந்தமை தெரியவந்துள்ளது.

# அருளானந்தன் மறைவுக்கு சைவநெறிக் கழகம் அனுதாபம்

சைவ சமயத்துக்கும் சமூகத்திற்கும் அளப்பரிய சேவைகள் பல ஆற்றி வந்தவர் பிரபல வர்த்தகர் S.T.S. அருளானந்தன். இவரது மறைவுக்கு இலங்கை சைவநெறிக் கழகம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இவர் அகில இந்து மாமன்றத்தின் துணைத் தலைவராகவும் பல ஆண்டு காலம் சேவையாற்றியதுடன் இது போன்ற இந்து அமைப்புக்கள் பலவற்றில் சேர்ந்து பல்வேறு பணிகளை ஆற்றிவந்தவர். இவரது மறைவு இந்து மதத்திற்கும் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

இவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என இலங்கை சைவநெறிக் கழகம் விடுத்துள்ள அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு இறை பிரார்த்தனை செய்கிறோம்

## இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி வைத்தீஸ்வர குருக்கள்

சிந்தனைச்செல்வர் அமரர் சின்னத்துரை (லீலா குரூப்) அவர்களின் மகனும் விடைக்கொடிச்செல்வர் தனபாலாவின் சகோதரருமான சமய, சமூக சேவகர், பிரபல வர்த்தகர் அருளானந்தன் அவர்களின் இழப்பானது அனைவருக்கும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. கொழும்பு கப்பித்தாவத்தை கதிர்காம யாத்திரை சபையின் தலைவராகவும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவராகவும், கதிர்காமம் தெய்வானை அம்மன் ஆலய நிர்வாக குழு அங்கத்தவராகவும் சிறந்த வர்த்தக பிரமுகராகவும் விளங்கியவர். பல்வேறு பகுதிகளில் இருந்து கொழும்பு வரும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு தங்குமிடம் உணவு உட்பட பல்வேறு நற்பணிகளுக்குரியவர். நாட்டில் யுத்த நிறைவு காலத்தில் எம்முடன் இணைந்து இடைத்தங்கல் முகாமில் உள்ளோருக்கு தேவையான விடயங்களை பெற்றிட அல்லது வழங்கிட உற்ற துணை புரிந்தவர். இவரது சமூகப்பணி பரந்து நீண்டு செல்கிறது. வர்த்தக ரீதியில் சாதனை படைத்துள்ளார். இதனூடாக தமிழ் மக்களுக்கு இயன்றவரை இயன்ற உதவிகளை வழங்கி உள்ளார். அருளானந்தன் அவர்களின் இறை பத செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம். அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் இறை பிரார்த்தனை செய்கிறோம். இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வர குருக்களும் இந்துக் குருமார் அமைப்பின் செயலாளர்

சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்களும் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

தினகரன் THINAKARAN
2024 செப்டெம்பர் 28 சனிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.03
அஸர் - 03.16
மஃரிப் - 06.05
இஷா - 07.14

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புரட்டாதி 12
ராகுகாலம் : காலை : 9.02 - 10.32வரை
சுபநேரம் : மாலை : 3.02 - 4.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



தரம் 5 புலமைப் பரிசில் வினாத்தாள் விவகாரம்

# மாணவர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு உடனடியாக நீதி வழங்க வேண்டும்

## பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய



புலமைப்பரிசில் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக வெளியாகியதால் மாணவர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டுமென்பதுடன், கசிந்துள்ள விடயங்கள் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை சுயாதீன நிபுணர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அனைத்து திணைக்கள அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (26) காலை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

“பாடசாலை கல்வியை மேம்படுத்துவது தற்போதைய அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எங்கள் அரசாங்கத்தின் கீழ் கல்விக்காக அதிக நிதியை ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளோம். கல்வி அமைச்சு மற்றும் பரீட்சை திணைக்களம் தொடர்பில் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அவநம்பிக்கையை இல்லாதொழிப்பதற்கு இந்த நிறுவனங்கள் செயல்திறன் மிக்கதாக செயல்பட வேண்டும். குறிப்பாக, பரீட்சைகளை நடத்துதல் மற்றும் பெறுபேறுகள் ஆகியவற்றை விரைவாக வெளியிடுவது அவசியம்” என்றார்.

ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,


“முறையான நடைமுறை விதிகளின் கீழ் ஆசிரிய சேவையில் ஆட்சேர்ப்பு இடம்பெற வேண்டும். மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியர் வெற்றிடங்கள் வெளிப்படைத் தன்மையுடன் நிரப்பப்பட வேண்டும். எனது பாடசாலை காலம் முதல் இந்த விடயத்தில் எனக்கு ஆலோசனை ஒன்று உள்ளது. இதனை ஒரேயடியாக செய்துவிட முடியாவிட்டாலும் மனநலம் மற்றும் மன உளைச்சல் போன்ற பிரச்சினைகள் பாடசாலை மட்டத்தில் தெரிவிக்கப்படுகின்றன. இந்த விஷயத்தில் நாம் தலையிட வேண்டும்” என்றும் பிரதமர் கூறினார்.

“நாம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இந்த தலைமுறையும் கோவிட் நோயை எதிர்கொண்டது. பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட உள்நாட்டு பிரச்சினைகளையும் எதிர்கொண்டனர். இவற்றையெல்லாம் கடந்து வந்த ஒரு தலைமுறை. இந்த தலைமுறையில் குடும்ப பிரச்சினைகள் உண்டு. ஆசிரியர்களுடனான பிணைப்பும் குறைந்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் வகையில் மதிய உணவுத் திட்டங்களை முறையாக முன்னெடுக்க வேண்டும், உள்கட்டமைப்பு அபிவிருத்திகளை ஒழுங்காகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையிலும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும், மக்கள் பிரதிநிதிகளை பாடசாலைகளுக்கு அழைத்து வருவதை நிறுத்த வேண்டும்” என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இங்கு மேலும் தெரிவித்தார்.

# சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதற்கு பொலிஸ், முப்படைக்கு அழைப்பு

## விசேட வர்த்தமானி ஜனாதிபதியால் வெளியீடு



நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக முப்படையினருக்கு அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளியிட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினரை அழைப்பதற்கான உத்தரவு அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தலே வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது கடமையை பொறுப்பேற்ற பின்னர் முதன்முறையாக முப்படையினரை அழைக்கும் வர்த்தமானி அறிவித்தல் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னாள் எம்.பி. களுக்கு வழங்கப்பட்ட

# பொலிஸ் பாதுகாப்பு உடனடியாக வாபஸ்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்று (27) முதல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. உடனடியாக பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சபாநாயகர், பிரதி சபாநாயகர், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் தவிர்ந்த இதுவரையில் வழங்கப்பட்டு வந்த அமைச்சர்களின் பாதுகாப்பு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது.

06

ஊழல், முறைகேடுகளை ஒழிப்பதற்கான

# புதிய அரசாங்கத்தின் திட்டத்துக்கு ஜப்பான் முழு ஆதரவு வழங்கும்

## ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி உறுதி



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் முதன்மை பணியாக கருதப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகளை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டத்துக்கு ஜப்பான் அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்குவதோடு, இலங்கையுடன் தொடர்ந்து நெருக்கமாக செயற்பட தயாராகவுள்ளதாகவும், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் *MIZUKOSHI Hideaki* தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள 11 திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படுமெனவும், ஜப்பானிய தூதுவர் உறுதியளித்தார்.

06

நீண்ட காலமாக இழுபறியிலிருந்த

# வெளிநாட்டவர் விசா பெறும் சிக்கல்களுக்கு உடனடி தீர்வு



## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

பாரிய சிக்கலாக மாறி காணப்பட்ட விசா பெற்றுக்கொள்ளும் பிரச்சினைக்கு கடந்த 24 மணி நேரத்துள் அரசாங்கம் தீர்வு வழங்கியுள்ளதாகத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத், நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணி முதல் பழைய முறைப்படி அனைத்து வெளிநாட்டவர்களும் விசா பெற்றுக்கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டார்.

VFS நிறுவனத்துக்கு விசா வழங்கும் வசதி வழங்கப்பட்டதால் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டதுடன், குறிப்பாக இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் விசா பெறுவதில் சிக்கலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனவே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டால் நீதிமன்ற தீர்ப்புக்கமைய பழைய முறைப்படி விசா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இனிமேல் வெளிநாட்டவர்கள் இலகுவாக விசா பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் கூறினார்.

மேலும் தற்போது ஒன்லைனில் விசா பெற்றுக்கொள்ள வெளிநாட்டவர்கள் எளிதாக விண்ணப்பிக்கலாமென்பதுடன், 24 மணி நேரத்துக்குள் விசா வழங்கப்படுமெனவும், அவர் குறிப்பிட்டார்.

விசா பிரச்சினையை தற்போது தீர்த்துள்ளதாகவும் இது தொடர்பாக சட்ட மாஅதிபரிடம் ஆலோசனை பெற்றுக்கொண்டதாகவும் நீதிமன்ற தீர்ப்பின்படி தாம் உடனடியாக செயற்பட்டதாகவும், அவர் கூறினார்.

VFS நிறுவனத்துக்கு இதனை வழங்கியதால் ஏற்பட்ட முறைகேடு தொடர்பாக உடனடியாக தடயவியல் கணக்காய்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கணக்காய்வின் மூலம் இந்த கொடுக்கல், வாங்கலில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக விசாரித்து எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்நிலையில் வர்த்தகம், முதலீட்டு துறையில் இருப்பவர்களும் இந்த வசதியை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

# இந்திய பிரதமர் மோடியிடம் தமிழக முதல்வர் வேண்டுகோள்



இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படும் பிரச்சினைக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நிரந்தர தீர்வு காண வேண்டுமென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், வேண்டுகோள் விடுத்துள்ளார். புதுடில்லிக்கு நேற்று சென்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியப் பிரதமரை சந்தித்து மனுவை கையளித்துள்ளார். அம்மனுவிலேயே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்,

"இந்தியப் பிரதமருடனான சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமைந்தது. பிரதமர் மோடி மகிழ்ச்சியுடன் எங்களிடம் பேசினார். இந்த மகிழ்ச்சியான சந்திப்பை பயனுள்ள சந்திப்பாக மாற்றுவது பிரதமரின் கைகளில் இருக்கிறது. சந்திப்பின் போது 3 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

முதலாவதாக சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட பணிகளை போல் 2ஆம் கட்ட பணிகளையும் மத்திய அரசாங்கமும் தமிழக அரசாங்கமும் இணைந்து நடத்த வேண்டும். அதற்கான மத்திய அரசாங்கத்தின் நிதியை தாமதமின்றி விடுவிக்க நடவடிக்கை வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளேன். இரண்டாவதாக ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஆண்டில் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய முதல் கட்ட தவணையை விடுவிக்க வேண்டுமென்று கேட்டு கொண்டுள்ளேன்.

மூன்றாவதாக தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளை எடுத்துக் கூறியுள்ளோம். எமது மீனவர்களை சிறைப்பிடித்து இலங்கை கடற்படையினர் துன்புறுத்துகின்றனர். இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும் மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்” என்றார்.

ஒக்டோபர் 10ஆம் திகதி

# கப்ரால் உட்பட 5 பேருக்கு நீதிமன்றில் ஆஜராக உத்தரவு



கிரேக்க முறிகள் (*Treasury Bills*) கொடுக்கல், வாங்கல் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உட்பட 5 பேரை அடுத்த மாதம் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த போது கிரேக்க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட திறைசேரிப் பத்திரங்களை கொள்வனவு செய்தமையினூடாக அரசாங்கத்துக்கு 184 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்து, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கு முன்னர் இந்த கொடுக்கல், வாங்கல் தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டதுடன்,

06

இலஞ்சம், ஊழல், மோசடி ஒழிப்பு

# அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் சாத்தியமாகும்



தெஹிவளை, கல்கிஸ்ஸை விசேட நிருபர்

நாட்டில் மாற்றத்தை காண்பிக்க வேண்டும். இலஞ்சம், ஊழல், மோசடிகளை நிறுத்துவது எப்படி என்று சிந்திக்க வேண்டும். இது எளிதான விடயமல்ல. எனினும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் செய்து காண்பிக்க முடியும்.

சேவையை நாடி வரும் மக்களுக்கு எளிதான சேவை வழங்குநர்களாக நாம் இருக்க வேண்டுமென மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் தெரிவித்துள்ளார். மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஹனீப் யூசுப் தனது கடமையை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

பத்தரமுல்லையிலுள்ள மேல் மாகாண சபையின் ஆளுநர் அலுவலகத்திலேயே நேற்று முன்தினம் அவர் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது உரையாற்றிய அவர்,

மேல் மாகாண ஆளுநராக பொறுப்பேற்க என்னை புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அழைத்திருந்ததார். நான் ஒரு வர்த்தகராக உள்ளதுடன், எனக்கு ஏன் இந்தப் பொறுப்பை தருகிறீர்களெனவும் வினாவினேன்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, மக்களுக்கு வித்தியாசமான சேவைகளை நாம் பெற்றுக்கொடுக்க வேண்டும். பழைய முறையை விட்டு மக்களுக்கு நாம் சிறந்த சேவைகளை வழங்க வேண்டுமெனத் தெரிவித்தார். மக்களுக்கு மாற்றத்தை உணர செய்ய வேண்டுமென்றார். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகலாம். அவர்கள் வரி செலுத்துவார்கள். ஆனால் வறுமையிலுள்ளவர்கள் இன்னும் கீழே சென்றுவிடக் கூடாது என ஜனாதிபதி என்னிடம் கூறினார். அந்த சொற்கள் என்னை பாதித்துவிட்டன. நான் ஒரு வர்த்தகர் என்னால் என்ன செய்ய முடியுமென சிந்தித்தேன். நான் இங்கிருந்து சுமார் 40 நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளேன்.

எனக்கு தெரிந்ததெல்லாம் வர்த்தகம் தான். ஆனால் இந்த மாற்றத்துக்காக செய்தாக வேண்டும். இதனை தனித்து செய்துவிட முடியாது. உங்கள் அனைவரது ஒத்துழைப்பு அவசியம்.

நாட்டில் மாற்றத்தை காண்பிக்க வேண்டும். இலஞ்சம், ஊழல், மோசடிகளை நிறுத்துவது எப்படி என்று சித்திக்க வேண்டும். இது எளிதான விடயமல்ல. எனினும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் செய்து காண்பிக்க முடியும்.

சேவையை நாடி வரும் மக்களுக்கு எளிதான சேவை வழங்குநர்களாக நாம் இருக்க வேண்டும். வெளிநாடுகளில் அலுவலகங்களுக்கு சென்றால், அங்கு முதலில் தேநீர், சிற்றுண்டி தருவார்கள். நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய சேவைகளை எளிதாக செய்துகொண்டு வரமுடியும். அந்த நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

நான் உங்களிடம் எனக்காக கேட்பது ஒரு கப் தேநீர் மட்டுமே என்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் வெளிப்படை தன்மையுடனான

# வேலைத்திட்டங்களுக்கு KOICA முழு ஆதரவு

தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய வேலைத்திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்க கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (KOICA) இணக்கம் தெரிவித்துள்ளது.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் நேற்று (27) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தனர்.

06

# வட்டி வீதங்களை அதே நிலையில் பேண மத்திய வங்கி தீர்மானம்

இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை அதே நிலையில் பேணுவதற்கு வங்கியின் நாணய கொள்கை சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நாணய கொள்கை சபையின் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் முறையே 8.25 சதவீதம், 9.25 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

பணவீக்கமானது நடுத்தர காலத்தில் 05 சதவீதம் கொண்ட இலக்குடன் இசைந்து செல்வதை உறுதிசெய்யும் அதேவேளை, பொருளாதாரம் அதன் அதிகபட்சமான உள்ளார்ந்த ஆற்றல் அடைவதை இயலச் செய்யும் நோக்கில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்கள் மீதான அண்மைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும்




நிச்சயமற்ற தன்மையை கவனமாக கருத்திற்கொண்ட பின்னர் நாணய கொள்கை சபை இந்த தீர்மானத்தை எடுத்தது.

அடுத்த சில காலாண்டுகளில் பணவீக்கமானது 5 சதவீதம் கொண்ட இலக்குக்கு மிகவும் கீழாக தொடர்ந்தும் காணப்பட்டு, நிர்வாக ரீதியாக நிர்ணயிக்கப்படும் விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் நிரம்பல் நிலைமைகளின் மெதுவடைதல் என்பவற்றால் தூண்டப்பட்டு மிக நெருங்கிய எதிர்காலத்தில் பணச்சுருக்கத்தை பதிவு செய்யக் கூடுமென்பதையும் இலங்கை மத்திய வங்கியின் நாணய கொள்கை சபை அவதானத்தில் கொண்டுள்ளது.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 12ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 24

**குறள் தரும் சிந்தனை**

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்

நண்பர்களுடன் பழகி மகிழத்
தெரியாதவர்களுக்கு உலகம் என்பது
பகலில் கூட இருட்டாகத்தான் இருக்கும்.

# அபிவிருத்திப் பாதையில் முன்னேறிச் செல்வோம்!

இலங்கை மாத்திரமன்றி சர்வதேச நாடுகளே எதிர்பார்த்திருந்த ஜனாதிபதித் தேர்தல் கடந்த வாரம் நடைபெற்று முடிந்துள்ளது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் பலமுனைகளில் பெரும் போட்டி நிலவியது. வெற்றிதோல்வியை முன்கூட்டியே முடிவு செய்ய முடியாதவாறு தேர்தல் களம் மிகவும் பரபரப்பாக இருந்தது. கடுமையான போட்டிகளின் இறுதியில் ஜனாதிபதியாகத் தெரிவாகி பதவியேற்றுள்ளார் அநுரகுமார திசாநாயக்க.

மக்கள் தமது நாட்டின் தலைவராக அநுரகுமார திசாநாயக்கவை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்துள்ளார்கள். இலங்கையை எதிர்காலத்தில் திறம்பட நிர்வகிக்கக் கூடிய தலைவர் அவர்தான் என்ற முழுமையான நம்பிக்கையில் நாட்டு மக்கள் இத்தீர்ப்பை தமது வாக்குரிமை மூலம் வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்ததற்குப் பல்வேறு காரணங்கள் இருந்ததாக அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஊழல், முறைகேடு, மோசடி போன்றவற்றுக்கு எதிராக அவர் நீண்ட காலமாகக் குரலெழுப்பி வந்துள்ளார். நாட்டில் ஊழல் மோசடிகளையும் வீண்விரயங்களையும் முற்றாக ஒழித்தாலேயே பொருளாதாரத்தை ஸ்திரநிலைக்குக் கொண்டுவர முடியுமென்பது அவரது பிரதான கருத்தாக இருந்தது.

ஊழல் மோசடியும் வீண்விரயங்களும் இல்லாத நாட்டை உருவாக்கி உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்பதை அவர் வலியுறுத்தி வந்தார். நாட்டின் விவசாயத்துக்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்பதும் அவரது எண்ணங்களில் முக்கியமானதொன்றாக இருந்தது. இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் விவசாயத்துக்கு முக்கியத்துவமளிப்பதற்குத் தவறிவிட்டன. இதன் காரணமாக எமது நாடு உணவுப் பொருட்களுக்காக வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

விவசாயத் தொழிலில் ஈடுபடுவதை கௌரவக்குறைவாக எமது இளைஞர்கள் நினைத்தனர். எனவே விவசாயத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து போனது. இலங்கையில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதற்கு இதுதான் காரணமாகும். எமது நாட்டின் பொருளாதாரத்தில் உயிர்நாடியாக இருந்த விவசாயம் காலப் போக்கில் கவனிப்பாரற்ற நிலைமைக்கு உள்ளானது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மக்கள் அதிகளவில் ஆதரவளித்தமைக்கு அவரது விவசாயக் கொள்கையும் ஒரு காரணமாகும். நாட்டின் பின்தங்கிய பிரதேசங்கள் பலவற்றிலும் உள்ள விவசாயிகள் அநுரகுமார திசாநாயக்கவுக்கு பெருமளவில் வாக்களித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று கற்றோர் சமூகத்தினரின் ஆதரவும் அவருக்கு அதிகளவில் கிடைத்திருக்கின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் மாத்திரமன்றி, ஒட்டுமொத்த கற்றோர் சமூகத்தினரும் அநுரகுமார திசாநாயக்கவுக்கு இத்தேர்தலில் அதிகளவில் வாக்களித்துள்ளனர். இன்றைய இளைய சமூகத்தினரை சரியான திசைக்கு அவர் கொண்டுசெல்வாரென்ற எண்ணத்திலேயே அவரை இத்தேர்தலில் கற்றோர் சமூகம் ஆதரித்துள்ளது.

அதாவது நாட்டின் ஒட்டுமொத்த தரப்பினரின் ஆதரவும் அநுரகுமார திசாநாயக்கவுக்குக் கிடைத்திருப்பது நிரூபணமாகியுள்ளது. அவர் மீதான நம்பிக்கையின் வெளிப்பாடே இதுவாகும்.

அவர் மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றப்படுவதற்கு நாட்டின் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டியது அவசியமாகின்றது. அரசியல் பேதங்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவப் போவதில்லை. அரசியல் நல்லுறவின் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

இருவருட காலத்துக்கு முன்னர் எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தமை அனைவருக்கும் நினைவிருக்கலாம். அந்நெருக்கடியில் இருந்து எமது நாடு இன்னுமே முற்றாக மீண்டெழவில்லை. பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி விரைவாகச் செல்ல வேண்டிய நிலைமையில் எமது நாடு உள்ளது. வீண்விரயங்களைத் தவிர்த்து விரைவான பொருளாதார முன்னேற்றப் பாதையில் நாம் செல்ல வேண்டியுள்ளது.

வாழ்க்கைச் சுமை காரணமாக மக்கள் அனுபவிக்கின்ற இன்னல்கள் களையப்பட்டு அபிவிருத்தியடைந்த நாடு என்ற இடத்தை இலங்கை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு ஆகும். ஊழல், மோசடிகள், வீண்விரயம் போன்றவை நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடை என்பதை மறந்து விடலாகாது. அவற்றை ஒழிக்க வேண்டும் என்பது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் குறிக்கோள் ஆகும்.

நம் இலங்கைத் தேசம் அழகியதும், வளம் நிறைந்ததுமானதுமாகும். எமது நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைவதற்கு கடந்தகால அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளே காரணமாகும். நாட்டுக்கு இப்போது புதிய தலைமைத்துவம் கிடைத்துள்ளது. அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# ஜனாதிபதி அநுரகுமாரவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை-இந்திய உறவு சுமுகமாகத் தொடரும்





## சர்வதேச அரசியல் அவதானிகள் நம்பிக்கை

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும், ஜனதா விமுக்தி பெரமுனவின் (மக்கள் விடுதலை முன்னணி_ ஜே.வி.பி) தலைவருமான அநுரகுமார திசாநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசியல் வரலாற்றில், ஜனாதிபதித் தேர்தலில் ஓர் இடதுசாரிக் கட்சி வெற்றிபெறுவது இதுவே முதன்முறை.

அதேபோல், அக்கட்சியைச் சேர்ந்த ஹரிணி அமரசூரிய புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதன் மூலம் அந்நாட்டின் மூன்றாவது பெண் பிரதமர் என்கிற பெருமை அவருக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நகர்வுகள் நம்பிக்கை அளிப்பதுடன், பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கும் வித்திட்டிருக்கின்றன.

இலங்கையில் 2009 இறுதிக்கட்டப் போருக்குப் பிறகு, உறுதியில்லாப் பொருளாதார நிலை நீடித்துவருகிறது. கொரோனா பொதுமுடக்கம், ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் மோசமான நிர்வாகம், இனமுரண்பாடு போன்ற பல்வேறு காரணிகளால் இலங்கை பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

அந்தக் காலகட்டத்தில் நடந்த மக்கள் போராட்டம் ஜனாதிபதி மாளிகையின் கதவுகளைத் தகர்க்கும் அளவுக்குச் சென்றது. இந்தப் போராட்டங்களை முன்னெடுத்ததில் ஜே.வி.பியின் பங்களிப்பும் இருந்ததாக தகவல்கள் உள்ளன.

இலங்கையின் வளர்ச்சித் திட்டங்களில் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பங்கு அதிகமாக இருந்தது. இது ஒருவகையில் தெற்காசியப் பிராந்தியத்தின் ஆளுமைப் போட்டியின் ஒரு பகுதியாகச் சர்வதேச அரங்கில் பார்க்கப்பட்டது. அதேபோல், தள்ளாடிக் கொண்டிருந்த இலங்கைப் பொருளாதாரத்தை மீட்பதில் இந்தியா கணிசமான உதவியை நல்கியது.

இந்தச் சூழலில், புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள அநுரகுமார திசாநாயக்கவின் இந்தியாவுடனான உறவு எப்படி இருக்கும் என்பது கேள்விக்கு உரியதாக இருக்கிறது. விடுதலைப் புலிகள் விவகாரத்தில் ஜே.வி.பி இந்தியாவைச் சந்தேகித்ததாகச் சொல்லப்படுகிறது.

அதுபோல் சுனாமிக்குப் பின்னரான பாதிப்புகளைச் சரிசெய்ய சந்திரிகா குமாரதுங்க அரசு முடிவெடுத்தபோது, ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் அதன் கூட்டணிக் கட்சியாக இருந்த ஜே.வி.பி அதை எதிர்த்தது. அப்போது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த அநுரகுமார உள்ளிட்ட பலர் அதற்காகப் பதவி விலகினர். அதுபோல் அதிகாரப் பகிர்வு விஷயத்திலும் ஜே.வி.பியின் நிலைப்பாடு வேறுபட்டதென்று இலங்கை அரசியலில் அபிப்பிராயம் நிலவுகின்றது. மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடு என்னவென்பது இனிமேல்தான் தெரியவரும்.

இந்திய நிறுவனமான அதானி குழும முதலீட்டில் காற்றாலை மின்திட்டத்தை ஜே.வி.பி எதிர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அது நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் இணக்கமாகப் பணியாற்ற விரும்புவதாக இந்தியா ஏற்கனவே தெரிவித்திருந்தது. இணக்கமாகவே இருக்க முயல்கிறது. அநுரகுமாரவின் இந்தியப் பயணத்தின் போது அவர் இந்திய அரசால் கௌரவமளித்து உபசரிக்கப்பட்டார். ஜனாதிபதியான பிறகு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அநுரகுமாரவுக்கு நேரில் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். அதுபோல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இடதுசாரி கோட்பாடு கொண்ட கட்சி என்கிற நிலையில் சீனாவுடனே உறவைப் பேணக்கூடும் என்கிற பேச்சு நிலவினாலும், ஜனாதிபதி என்கின்ற முறையில் இந்தியாவுடன் சுமுகமான உறவையே எதிர்காலத்தில் அநுரகுமார மேற்கொள்வார் என்றே சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். பிராந்திய அளவில் ஒரு சுமுக உறவையே பேண விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, பொருளாதாரச் சரிவை மீட்டெடுப்பது, தெற்காசியப் பிராந்தியத்தின் சர்வதேச அரசியலைக் கையாள்வது என்பன உள்ளிட்ட பொறுப்புகள் அநுரகுமாரவுக்குக் காத்திருக்கின்றன. கூடவே, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்னும் எதிர்பார்ப்பும் இந்தியத் தரப்பிலிருந்து எழுந்திருக்கிறது. இவற்றை அவர் கையாள்வதில்தான் இலங்கையின் எதிர்காலம் இருக்கிறது எனலாம்.

(நன்றி: இந்து)

# உலகளாவிய ஜெபஊழியத்தின் ஸ்தாபகர் போதகர் நொயல் ஆம்ருஸ் தலைமையில் இலங்கையின் பல இடங்களில் நற்செய்தி மாநாடு



“அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகின்றதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்”_ மத்தேயு 24:2930

வருங்காலத்தைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை உலகில் யாவருக்கும் உண்டு. பலர் தங்கள் இவ்வுலக வாழ்க்கையில் என்ன நடக்கப் போகிறது என்பதை மட்டுமே அறிய விழைகின்றனர். இதற்காகப் பலரை நாடி பலவிதங்களில் வருங்காலத்தை அறிய முனைந்து ஏமாந்து போகிறனர். ஆனால், வேதம் மட்டுமே ஒவ்வொரு மனிதனின் இறுதியையும் மனுக்குலத்திற்கு வரவிருப்பவற்றையும் தெளிவாகவும் சரியாகவும் கூறுகின்றது.

மனுக்குலத்தைப் பொறுத்த அளவில் அடுத்து நடக்கவிருப்பது ‘இரகசிய வருகை’. கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பின்னர் இரகசிய வருகை இருக்கும் என்று சிலர் கூற முனைந்துள்ளனர். ஆயிரம் அரசாட்சி முடிந்ததும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு நடந்து புதியவானம் புதியபூமி ஏற்படுத்தப்பட்டு, பிதாவாகிய தேவனாகியவர் பூமிக்கு வந்து சேருவதையும் வேதாகமத்தில் வெளிப்படுத்தல் 20:421:10 இல் காண்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது எடுத்துக் கொள்ளப்படாதவர்கள் அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியில் சிக்கித் தவிப்பார்கள். ஆகவே நாமும் மறுரூபமாக்கப்படுகின்றவர்களாய் ஒரேநேரத்தில் மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆகாயத்தில் கிறிஸ்துவைச் சந்திக்கவும், அங்கிருந்து அவருடன் பரலோகத்திற்குச் சென்று அவர் ஆயத்தம் பண்ணிவைத்த உறைவிடங்களை சென்றடையவும் பாத்திரவான்களாக இருப்பதே எங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.









இதன்படி கடந்த வாரங்களில் உலகளாவிய ஜெப ஊழியத்தின் ஸ்தாபகர் போதகர் நொயல் ஆம்ருஸ் தலைமையில் இலங்கையில் பல இடங்களில் நற்செய்தி மாநாடு, போதகர்கள் ஒன்றுகூடல் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்புக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தும் ஒரு தேவமனிதர், இந்திய தேசத்திலிருந்து வருகை தந்திருந்த சகோதரர் எம். டி. ஜெகன் அவர்கள் ‘சபை, கிறிஸ்துவின் வருகை, விசுவாசிகளின் நிலை, கடைசி கால பரிசுத்த வேதாகம அடையாளங்கள், ஊழியம் அழைப்பு இன்றைய நிலை, வாலிப வயதில் கிறிஸ்துவோடு நடத்தல் போன்ற தலைப்புக்களில் தேவசெய்தியை பகிர்ந்து கொண்டார்.

நாம், தேவனுடைய வார்த்தைகளை கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பி விழித்திருக்கிறவர்களாய் இருக்க வேண்டும். உபத்திரவ காலத்துக்கு தப்பி இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கத் தகுதியுடையவர்களாக இருக்கும்படி நாம் ஜெபம் செய்வோம். வெளிப்படுத்தல் 3:5

“ஜெயங்கொள்ளுகின்றவன் எவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.” ஆமென்.

தேவதாஸ் சவரிமுத்து...
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

# அம்பாறை மாவட்ட உணவகங்கள் சிலவற்றில் தரமற்ற உணவுகள் விற்கப்படுவதாக புகார்கள்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள உணவகங்களை உடன் பரிசோதனை செய்து மக்களை நோயிலிருந்து பாதுகாக்குமாறு அம்பாறை மாவட்டத்தில் வாழும் மக்கள் பலர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் இயங்கிவரும் ஒரு சில உணவகங்களில் மக்களின் ஆரோக்கியத்திற்குப் பொருத்தமில்லாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதனால் பொதுமக்கள் நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.



கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் கொத்துறொட்டிக்கு பயன்படுத்தப்படும் றொட்டி, அதற்குப் பயன்படுத்தப்படும் கறிவகைகள் குளிரூட்டியில் பல நாட்கள் வைக்கப்பட்டு பழுதடைந்த நிலையில் உணவாகத் தயாரிக்கப்படுவதாக பாவனையாளர்கள் கூறுகின்றனர். மனித பாவனைக்கு உதவாத வகையில் கொத்துறொட்டி தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், அதேபோன்று மரவள்ளிக்கிழங்கு பொரித்து விற்பனை செய்யப்படும் கடைகளில் பழைய எண்ணெய் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. மாட்டுக் கொழுப்பைப் பயன்படுத்தி மனித பாவனைக்கு உதவாத முறையில் கறிகள் தயாரிக்கப்படுவதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனால் மக்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. எனவே உணவகங்கள் மீது சோதனை நடத்துமாறு கோரப்படுகின்றது.

எம்.எல்.சரிப்டீன்...
(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

# பிரபல ஊடகவியலாளரும், கல்விப்பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜாவின் வைரவிழா நிகழ்வு இன்று

## 36 வருட கல்விச்சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்

பிரபல ஊடகவியலாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா இன்று (28) வைரவிழா அகவையில் கால்பதிக்கிறார்.

36 வருட கால கல்விச் சேவையிலிருந்து சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நேற்று (27)வெள்ளிக்கிழமை தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றார்.

இவரது 60 ஆவது அகவை பிறந்தநாளான இன்று(28) சனிக்கிழமை பாசிக்குடா அமயா விடுதியில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991/92 புலன அணியினர் மணிவிழாக் கொண்டாட்டத்தை பொன். நடராஜா தலைமையில் நடத்துகின்றனர்.

சம்மாந்துறை கல்வி வலயத்தில் 26 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வெள்ளிவிழாக் கண்ட ஒரேயொரு உதவிக் கல்விப் பணிப்பாளர் இவராவார்.

சம்மாந்துறை வலய கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றினார். ஊடகவியலாளர் சகாதேவராஜா (ஜே.பி) காரைதீவைச் சேர்ந்தவராவார்.





முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் மிகவும் நெருங்கிய பற்றாளரான இவர், பத்து வருடங்கள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும், சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் 26 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார் .

பேராதனை பல்கலைக்கழக கலைத்துறை பட்டதாரியான இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராவார். பட்டப்பின் கல்வி டிப்ளோமோ மற்றும் கல்வி முதுமாணிப் பட்டமும் பெற்றவராவார்.

அத்துடன் இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபராவார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக, அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவராக, காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த பணிமன்றத் தலைவராக, இந்துசமய விருத்திச் சங்க தலைவராக, காரைதீவு விளையாட்டுக் கழகத் தலைவராக, கம்பன் கலைக்கழகத் தலைவராக, கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராக பல்வேறு அமைப்புகளில் தலைவராக, முன்னணி சமூக செயற்பாட்டாளராகப் பணியாற்றியுள்ளார். நாடறிந்த தலைசிறந்த ஊடகவியலாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

சமகாலத்தில் மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் ஆலோசகராக, மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகராக பல்வேறு பங்குகளினூடாக சமூக, சமய சேவையாற்றி வருகிறார்.

காரைதீவின் புகழ்பூத்த ஆசிரியர் வே.தம்பிராஜா மற்றும் தங்கநாயகம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராக இவர் காரைதீவில் 1964.09.28 அன்று பிறந்தார் .



ஆரம்பக் கல்வியை இராமகிருஷ்ணசங்க ஆண்கள் பாடசாலையில் பயின்றார். பின்னர் விபுலானந்த மத்திய கல்லூரியிலும் மற்றும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் பயின்றார்.

'ஊழியின் ஆழி' எனும் வரலாற்று நூலை 2005 இல் வெளியிட்டார். மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் மன்ற தலைவராக பணியாற்றிய வேளை அங்கு 'கலைச் செல்வி' நூலுக்கு நூலாசிரியராகப் பணியாற்றினார்.

சுவாமி விபுலானந்த பணிமன்றத்தின் அடிகளார் நினைவாலய மலருக்கும் சுவாமி நடராஜானந்தா ஜீயின் நூற்றாண்டு விழாவில் சேவையின் சிகரம் எனும் நூலையும் வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையின் அதிசிறந்த ஊடக விருதான மக்கள் சேவை ஊடக விருது 2007 இல் இவருக்குக் கிடைத்தது.

இத்தாலி, பாங்கொக், மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்குச் சென்று சிறப்பு அனுபவத்தைப் பெற்றிருந்தார்.

தேசமான்ய, வித்தகர், திகாமடுல்ல அபிமானி, விபுலமாமணி, வாழ்நாள் சாதனையாளர், வித்யசாஹித்யன், வித்யகலாசிறி, கலைச்செம்மல் போன்ற பல்வேறு விருதுகளை சகாதேவராஜா பெற்றுள்ளார்.

அவர் ஆன்மிக சொற்பொழிவு மற்றும் பிரசங்கங்களில் ஈடுபட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எஸ்.புருஷோத்தமன்...

# பெண்கள் தன்னம்பிக்கையுடன் முன்னோக்கி சென்று சவால்களை முறியடிக்க வேண்டும்

## கொலன்னாவ மகளிர் கல்லூரி மாணவிகள் மத்தியில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர



தலைமைத்துவத்தை நோக்கி பெண்கள் பயணிக்கும்போது எதிர்கொள்ளும் சவால்களை முறியடிப்பதாயின் அறிவு, திறமை மற்றும் தன்னம்பிக்கை என்பவற்றைத் தொடர்ந்தும் வளர்த்து, தடைகளைத் தாண்டி முன்னோக்கிச் செல்ல வேண்டும் என கொலன்னாவ மகளிர் கல்லூரி மாணவிகள் மத்தியில் உரையாற்றிய பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

கொலன்னாவ மகளிர் கல்லூரி மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலகில் முதல் பெண் பிரதமர் இலங்கையில் உருவாகியிருந்தாலும், பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்னும் 5% ஐ விட அதிகரிக்காத பின்னணியில், பெண்களின் தலைமைத்துவம் மற்றும் பிரதிநிதித்துவம் மேலும் விருத்தியடைய வேண்டும் என செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் இந்நாட்டின் பெண்களை வலுப்படுத்தும் வகையிலும் அவர்களின் உரிமைகளுக்காகவும் பாரிய பணியொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, கடந்த காலங்களில் பெண்கள் தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் சட்டங்களைத் திருத்துவதற்கும் முடிந்ததாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றம் பொதுமக்களிடமிருந்து தூரமாகியிருந்த கடந்த காலங்களில், இலங்கைப் பாராளுமன்றத்தினால் 200 இற்கும் மேற்பட்ட மாணவ பாராளுமன்றங்களுடன் தொடர்பு கொண்டு அறிவுறுத்தும் நிகழ்வுகளை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன், பாராளுமன்றக் குழுக்களில் இளைஞர் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்குதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை எடுக்க முடிந்ததாகவும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எம். ஜயலத் பெரேரா குறிப்பிடுகையில், பாராளுமன்றக் குழுக்களினால் திரைக்குப் பின்னால் பாரிய பணி மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.





ஒன்பதாவது பாராளுமன்றத்தில் சுமார் 70 குழுக்கள் செயற்பட்டதாகவும், 12 ஒன்றியங்கள் மற்றும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 'தேசிய பேரவை' உடன் இந்தத் தொகை 83 ஆகும் என அவர் தெரிவித்தார். அத்துடன், இந்தக் குழுக்கள் மற்றும் அவற்றின் பணிகள் தொடர்பில் மாணவர்களுக்குத் தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகள் மற்றும் ஆளுமை விருத்தி என்பவற்றுக்கு மாணவ பாராளுமன்றம் முக்கியமானது எனவும் ஜயலத் பெரேரா மேலும் தெரிவித்தார்.

கொலன்னாவ மகளிர் கல்லூரி மாணவ பாராளுமன்றத்தின் அங்கத்தவர்கள் பாராளுமன்ற பொதுமக்கள் களரி உள்ளிட்ட முக்கியமான இடங்களையும் இதன்போது பார்வையிட்டனர்.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தின் பொதுக்கள் சேவைகள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட இந்த நிகழ்வில் கொலன்னாவ மகளிர் கல்லூரி உதவி அதிபர் ஆர்.ஏ. எஸ். மதுபாஷிணி, பகுதித் தலைவர் டி.எம். தமராகாந்தி திசாநாயக்க, மாணவ பாராளுமன்றத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் நிசன்சலா அனுருத்தி கல்மன்கொட மற்றும் ஆசிரியர்களும், பாராளுமன்ற பொதுக்கள் சேவைகள் பிரிவின் முகாமையாளர் புத்தினி ராமநாயக்க உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

எம்.ஜயலத் பெரேரா...
பணிப்பாளர் சட்டவாக்க சேவைகள்/
பணிப்பாளர் தொடர்பாடல் (பதில்),
இலங்கை பாராளுமன்றம்

# தரைவழித் தாக்குதலுக்கு தயாராகின்றதா இஸ்ரேல்?



இஸ்ரேல் இராணுவத் தலைவர் தனது படைகளிடம், ஹிஸ்புல்லாவை குறிவைத்து நடத்தப்படும் விரிவான வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து, "எதிரியின் பகுதிக்குள் நுழையும் அவசியம் ஏற்படலாம்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற தாக்குதலில் 50 பேர் உயிரிழந்ததாக லெபனான் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் உளவுத்துறை இயக்குநரகம் தாக்கப்பட்டு, அவர்களின் ஆயுதக் கிடங்குகள் மற்றும் ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த மோதல்களை மட்டுப்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா 21 நாட்கள் போர்நிறுத்தம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதியும் பிரான்ஸ் ஜனாதிபதியும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், இந்த மோதல்கள் பொறுத்துக்கொள்ள முடியாதவை என்றும் அந்தப் பிராந்தியத்தில் நிலைமைகள் தீவிரமடைவதற்கான ஆபத்து இருப்பதாகவும் தெரிவித்தனர்.

"நாங்கள் அவர்களை எல்லா இடங்களிலும் தாக்கிக் கொண்டிருக்கிறோம்" என்று வடக்கு இஸ்ரேலில் இராணுவப் பயிற்சி ஒன்றில் பங்கேற்ற ஏழாவது பிரிகேட் அமைப்பைச் சேர்ந்த(இராணுவக் குழு) வீரர்களிடம் இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

இஸ்ரேல் லெபனானுக்குள் உடனே நுழைவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அமெரிக்க இராணுவ தலைமையகமான பெண்டகன், அது உடனடியாக நடைபெறுவதாகத் தெரியவில்லை என்று கூறியிருந்தது.

அமெரிக்கா உட்பட இஸ்ரேலின் நட்பு நாடுகள், அந்தப் பிராந்தியத்தில் ஒரு முழு வீச்சிலான போரைத் தடுக்க முயன்று வருகின்றன. இரு தரப்புக்கும் இடையே சிறிய காலத்துக்குப் போர் நிறுத்தம் ஏற்படுத்த அமெரிக்க மூத்த அதிகாரிகள் முயன்று வருவதாக பல ஊடக செய்திகள் வெளியாகின.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மாக்ரோன், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கூட்டத்தில் சந்தித்தபோது, போர்நிறுத்தத்திற்காக எடுக்கப்பட வேண்டிய முயற்சிகள் குறித்து அவருடன் ஆலோசித்தார்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு, இரு நாடுகளும் பேச்சுவார்த்தைக்கு இடம் அளிக்கும் வகையில் 21 நாள் தற்காலிக போர்நிறுத்தம் வேண்டும் என்று கோருவதாக பிரான்ஸ் கூறியது.

"லெபனானில் போர் ஏற்படக்கூடாது. இதற்காகத்தான் இஸ்ரேலிடம் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த வேண்டாம் என்று வற்புறுத்துகிறோம். ஹிஸ்புல்லாவிடம் இஸ்ரேலுக்குள் நடத்தும் ஏவுகணை தாக்குதல்களை நிறுத்துமாறு வறுபுறுத்துகிறோம்" என்று ஜனாதிபதி மாக்ரோன் ஐக்கிய நாடுகள் கூட்டத்தில் தெரிவித்தார்.

"நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது" என்று கவலை தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டெரஸ் உடனடியாக போர்நிறுத்தம் வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இதேவேளை லெபனான் பிரதமர் நஜிப் மிகாதி இஸ்ரேல் இராணுவத்தின் மிருகத்தனமான நடவடிக்கைகளால் தங்கள் நாட்டின் இறையாண்மை மற்றும் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதாக கூறியுள்ளானார்.

ஐக்கிய நாடுகள் கூட்டம் முடிந்து நாடு திரும்பும்போது, "அனைத்து எல்லைகளிலும் உடனடி போர்நிறுத்தம் செய்வதற்கு இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுப்பதில் ஒரு சீரிய முடிவு" எடுக்கப்படும் என்று நம்புவதாகத் தெரிவித்தார்.





## போர்நிறுத்தத்துக்கு அமெரிக்கா, பிரான்ஸ் வலியுறுத்தல்!

எல்லை தாண்டிய தாக்குதல்கள் புதன் கிழமை தொடர்ந்தன. இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் தலைமையகத்தைத் தாக்கியதாக ஹிஸ்புல்லா கூறியது. இஸ்ரேலின் மக்கள் செறிவாக வாழும் டெல் அவிவ் நகரத்தின் மீது ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்துவது இதுவே முதல்முறை.

ஆனால் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் செய்தித் தொடர்பாளர் கர்னல் நாடவ் ஷொஷானி, அந்த ஏவுகணை மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி வந்ததாகவும், மொசாட் தலைமையகம் அந்தப் பகுதியில் இல்லை என்றும் தெரிவித்தார்.

வடக்கு இஸ்ரேல் நோக்கி பத்துக்கும் மேற்பட்ட ட்ரோன்களை கொண்டு ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தியது. இதில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில், சமீபத்தில் லெபனான் மீது நிகழ்த்திய வான்வழித் தாக்குதல்களில் இஸ்ரேல் போர் விமானங்கள் 280 ஹிஸ்புல்லா இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

லெபனான் சுகாதாரத்துறை அமைச்சர் ஃபிராஸ் அபியாத் செய்தியாளர்களிடம் பேசும்போது, இஸ்ரேல் தாக்குதல்களில் 51 பேர் கொல்லப்பட்டதாகவும் 223 பேர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவித்தார். ஆனால் இதில் எத்தனை பேர் பொதுமக்கள், எத்தனை பேர் போராளிகள் என்று குறிப்பிடவில்லை.

தெற்கு இஸ்ரேலில் சௌஃப் மலைகளில் உள்ள ஜௌன், அதேபோன்று பெய்ரூட்டில் மற்றொரு மலைப் பாங்கான பகுதியில் உள்ள மேய்ஸ்ரா, பேகா பள்ளத்தாக்கின் வடக்கில் எனப் பல இடங்களில் கொடூரமாக இஸ்ரேலிய தாக்குதல்கள் நடைபெற்றதாக லெபனான் சுகாதாரத் துறை கூறியுள்ளது.

## ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு...

நியாயமான, அமைதியான தேர்தலின் மூலம் தங்களை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளதாகவும் தனது வாழ்த்துச் செய்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இந்தோ பசுபிக்கில் சமாதானம், பாதுகாப்பு மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதற்கு தங்களுடன் இணைந்து செயற்பட ஆர்வமாக உள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அமெரிக்க ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## கொழும்பின் சில வீதிகள்...

அவ்வீதிகள் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மாளிகையும் அதனை சூழவுள்ள பகுதிகளும் இதுவரை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தன. ஆனால் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அனைத்து வீதி தடைகளும் அகற்றப்பட்டு, பல வருடங்களின் பின்னர் அப்பகுதியிலுள்ள வீதிகள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதன்படி ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக உள்ள சேர். பாரோன் ஜயதிலக்க மாவத்தை, ஜனாதிபதி மாவத்தை வீதிகள் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டுள்ளன.

## நிலந்த ஜயவர்தனவுக்கு...

சட்ட மாஅதிபரின் சார்பில் ஆஜராகிய சிரேஸ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், நிலந்த ஜயவர்தன இழப்பீட்டு அலுவலகத்துக்கு இழப்பீட்டை செலுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து விபரித்தார். நிலந்த ஜயவர்தன சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி தனது கட்சிக்காரர் இதுவரை பத்து மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளார்.

அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதால் அவர் எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு மிகுந்த சிரமப்படுகின்றார்.

அவர் வேண்டுமென்றே இழப்பீட்டை செலுத்தாமல் விடவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரச நிறுவனங்களில்...

(27) காலை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் செலவுகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் இருந்த போதிலும் அதன் மூலமான முன்னேற்றம் குறித்து முறையான கணக்காய்வு அவசியமென்றும், கூடிய விரைவில் உள்ளக கணக்காய்வுகள் நடத்தப்பட வேண்டுமென்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு அறிவித்துள்ளார்.

பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமர் என்ற முறையில் எனது பொறுப்பிலுள்ள அனைத்து அமைச்சுகளிலும் இதுவரை நடக்க வேண்டிய மற்றும் முன்னெடுக்கப்படாத முன்னுரிமைகளை அடையாளம் கண்டு வருகிறேன். குறிப்பாக விளையாட்டுத்துறை அமைச்சில் பல விஷேட விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரச நிதி வீண் விரயம் மற்றும் துஷ்பிரயோகம் குறித்து ஒரு அரசாங்கமென்ற வகையில் நாம் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகிறோம். அதேபோன்று செலவினங்களை கட்டுப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறோம். இதன் காரணமாக விழாக்கள், கொண்டாட்டங்களுக்காக செய்யும் வீண் விரயம் குறைக்கப்பட வேண்டும். அரசாங்கத்திடமிருந்து பெற்ற நிதி மற்றும் செலவழிக்கப்பட்ட தொகைகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் அமைச்சிடம் உள்ளன. ஆனால் அந்த நிதி மூலம் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து இதுவரை எந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்படவில்லை. செலவு செய்யப்பட்ட பணத்தில் என்ன நடந்தது என்பதை உள்ளக கணக்காய்வின் ஊடாக கண்டறியுமாறும் பிரதமர் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலின் போது மற்றுமொரு முக்கிய விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகத்தில் நிகழும் முறைகேடு மற்றும் துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சிடம் குறிப்பிட்ட வேலைத்திட்டம் இல்லை. இதன் காரணமாக துஷ்பிரயோகம் குறித்து விசாரணை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்தேன் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு டக்ளஸ்...

ஒரு லீற்றருக்கு தலா 25 ரூபாவை மானியமாக வழங்குவதற்கான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யோசனைக்கு கடந்த அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த போதும், தேர்தல் சட்ட ஏற்பாடுகளுக்கமைய அத்தீர்மானம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் அதனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடவுச்சீட்டு கொள்வனவு...

செய்ததை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மொஹமட் லபார் தாகீரினால் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதிவரை அமுலில் இருக்கும் வகையில் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம், உரியக் கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றாமல் இந்த கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானம் எடுத்துள்ளதாகவும் இது முற்றிலும் சட்டவிரோதமானது எனவும் மனுதாரர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜனாதிபதியாக அநுரகுமார வந்ததால்...

கொள்வதாக, வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார். வடமாகாண ஆளுநராக நேற்று தமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்ட நாகலிங்கம் வேதநாயகன், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். தற்போது வந்துள்ள ஜனாதிபதியால் நாம் எவருக்கும் பயப்படாது மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்து செல்வதற்குரியவர் என்பதை தெரிவிப்பதாகவும், அவர் கூறினார். இந்த இடத்தில் வேறு எந்த ஜனாதிபதி வந்திருந்தாலும் இந்த பதவி தனக்கு கிடைத்திருக்க மாட்டாது. வேறொருவர் தனக்கு பதவியை தந்திருந்தாலும் தான் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டாரெனவும், அவர் மேலும் குறிப்பிட்டார். மிகவும் எளிமையான முறையில் நேற்று ஆளுநர் செயலகத்தில் தனது கடமையை ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பொறுப்பேற்றார். இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர்கள் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பதில் பொலிஸ் மாஅதிபராக...

நந்திக சனத் குமாநாயக்க ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றையதினமே வழங்கி வைத்துள்ளார். வடமத்திய மாகாணத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றிய இவர், பொலிஸ் சேவையில் 36 வருடகால அனுபவம் உள்ளவராவார். இவர் முதன்முதலாக பொலிஸ் கான்ஸ்டபிளாக தனது சேவையை ஆரம்பித்தார்.

## பாராளுமன்ற தேர்தலில்...

தன்னைப் போல் மற்றைய தமிழ்க் கட்சிகளில் உள்ள அரசியல் முதிர்ச்சி கொண்டவர்கள் தாம் வழிகாட்டியாக நின்றுகொண்டு இளைஞர்களுக்கு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்று தான் கோரிக்கை விடுப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"எமது கட்சியான தமிழ் மக்கள் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தமிழ்த் தேசியத்தை சிதைய விடாது பாதுகாத்துக்கொண்டு தமிழ் மக்களுக்குரிய உரித்துகளை வென்றெடுப்பதே ஆகும். இதன் பொருட்டு அரசியல் அனுபவம் உள்ளவர்களையும் இளைஞர்களையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களுக்கான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் மக்கள் என்னை நம்பி வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தனர்.

நான் எமது தமிழ் மக்கள் கூட்டணியின் பணிகளில் தொடர்கின்ற அதேவேளை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடாது இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து அவர்களுக்கு தொடர்ந்தும் துணை நிற்க முடிவு செய்துள்ளேன்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்துக்கு இளைஞர்களின் பங்களிப்புஅதிகமாக வேண்டிய தருணம் வந்துள்ளது. அதனை ஏற்று தமிழ் மக்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் இளையோருக்கு தமது ஆதரவை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தில் கடந்த முறை நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் எனக்கு வாக்களித்து என்னை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்த மக்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலகட்டத்தில் என்னால் முடிந்தளவுக்கு பாராளுமன்றத்திலும் சர்வதேசஅரங்கிலும் எமது மக்களின் பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள் மற்றும் அபிலாஷைகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளேன். குறிப்பாக, தமிழ் மக்களின் வரலாறு மற்றும் உரிமைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை சிங்கள மக்கள் மத்தியில் என்னால் ஏற்படுத்த முடிந்துள்ளதாக நம்புகின்றேன்.

நில ஆக்கிரமிப்பை தடுப்பதற்கு சர்வதேச ரீதியான மாநாடுகள் நடத்தி மற்றும் ஒரு ஆவணப் படம் ஒன்றையும் நான் எனது நண்பர்களுடன் இணைந்து மேற்கொண்டிருந்தேன். என்னால் முடிந்தவரை இதே பாதையில் தமிழ் மக்களுக்கான எனது அரசியல் பயணம் தொடரும்" எனத் தெரிவித்துள்ளார்.

## மின்சார கட்டணத்தை...

பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பதவிக்காலம் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும் புதிய பாராளுமன்றம் கூடிய பின்னர் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்களெனவும், அவர் தெரிவித்தார். 6 மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணத்தை ஆய்வு செய்ய வேண்டுமென்றும் ஆயினும் எதிர்பார்த்தபடி அது நடைபெறவில்லையெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசாங்க வீடுகள், பங்களாக்களை...

நிறுவனங்களுக்கு கொழும்பில் அரச பங்களாக்களை அரசாங்கம் வழங்கியிருந்தது.

இந்நிலையில் மாதிவலை உத்தியோகபூர்வ இல்லங்களை பாராளுமன்ற தேர்தல்வரை பயன்படுத்த பாராளுமன்ற அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

## மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தை...

விடுத்துள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மேற்படி மதுபான சாலையானது பாடசாலை, ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்கு அருகில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதுபான சாலை திறக்கப்பட்டுள்ளமையானது அப்பகுதி மக்களிடையே பாரிய மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது. இந்த விடயம் தொடர்பாக கடந்த மாதம் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது" எனத் தெரிவித்துள்ளார்.

## நஸீர் அஹமட் தனித்து...

கொண்டவர். கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் அவர் ஜனநாயக ஐக்கிய முன்னணி எனும் பெயரிலான அரசியல் கட்சியை வைத்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய முன்னணி, இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் தனித்துமாக போட்டியிட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. கடந்த காலங்களில் கறைபடியாத அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்ட, செயற்றிறன் மிக்க அரசியல்வாதிகள் பலரும் ஜனநாயக ஐக்கிய முன்னணியில் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அரசியல்வாதிகளும் தமது கட்சியில் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள போதும், பொதுமக்களின் அதிருப்திக்குள்ளான நாட்டின் நலனை பாதிக்கும் வகையில் கடந்த கால செயற்பாடுகளை கொண்ட எந்தவொரு அரசியல்வாதிக்கும் தமது கட்சியில் இடமளிக்கப்பட மாட்டாதென ஜனநாயக ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் இஸட்.ஏ.ஹி தாயத்துல்லா ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வெள்ளை சீனி இறக்குமதியை...

வற்வரி மற்றும் சமூக பாதுகாப்பு வரிகளிலிருந்து அரசாங்கம் விலக்களித்து, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனிக்கு மாத்திரம் அந்த வரிகளை விதித்ததே இதற்கு முக்கிய காரணமெனவும், சீனி உற்பத்தி தொழிற்சாலை நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலைமை காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனி ஒரு கிலோவின் விலை 325 ரூபா முதல் 350 ரூபாவரையிலும் இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனி ஒரு கிலோவின் விலை 225 ரூபா முதல் 250 ரூபாவரையிலும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் 100 வீதம் அரசாங்கத்துக்கு சொந்தமான செவனகல மற்றும் பெல்வத்த சீனி உற்பத்தி தொழிற்சாலைகளின் கீழ் சுமார் 1,500 தொழிலாளர்களும், 35,000 கரும்பு விவசாயக் குடும்பங்களும் உள்ளதாகவும் 51 தனியார் துறையினரால் நடத்தப்படும் நான்கு உள்ளூர் உற்பத்தி தொழிற்சாலைகள் கல்ஓயா மற்றும் எதிமலே ஆகியவற்றின் கீழுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையால் நிறுவன ஊழியர்களுக்கும், கரும்பு விவசாயிகளுக்கும் சம்பளம் வழங்க முடியாமல் தங்களது நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு தீர்வாக இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனிக்கு உடனடியாக VAT மற்றும் சமூக பாதுகாப்பு வரியை விதித்து வெள்ளை சீனி இறக்குமதியை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் உள்ளூர் சீனி தொழிற்சாலை நிர்வாகம் கோரியுள்ளது.

தற்போது இலங்கையில் மாதாந்த நுகர்வு சுமார் 30,000 மெற்றிக்தொன்னாக காணப்படுகிறது. அதேவேளை உள்ளூர் சிவப்பு சீனி உற்பத்தி வருடத்துக்கு சுமார் 120,000 மெற்றிக்தொன்னாகும். கடந்த நான்கு மாதங்களில் மட்டும் இலங்கைக்கு இற க்கு மதி செய்யப்பட்ட வெள்ளை சீனியின் அளவு 256,000 மெற்றிக்தொன் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலி. வடக்கு உயர் பாதுகாப்பு...

கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் மூடப்பட்டிருந்த இரண்டு வீதிகளை மீண்டும் மக்கள் பாவனைக்காக திறப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு பணித்ததை அடுத்தே ஜனாதிபதியிடம் முன்னாள் எம்.பி. அங்கஜன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"யுத்தம் முடிந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதும், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு தேவையான முக்கிய பல வீதிகள் யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டுள்ளதால், அப்பகுதி மக்களின் அன்றாட மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம் பலாலி வீதி (கிழக்கு பக்கம்), வசாவிளான் மத்திய கல்லூரிக்கு அடுத்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள வீதி இராணுவ கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இந்த வீதி பருத்தித்துறை பொன்னாலை வீதியுடன் இணைவதுடன், உள்ளூர் போக்குவரத்துக்கு இன்றியமையாததாகும்.

அச்சுவேலி வசாவிளான் தோளகட்டி வீதி: இந்த வீதி மூடப்பட்டுள்ளதால் அப்பகுதியிலுள்ள முக்கியமான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செல்வதற்கு இடையூறாக உள்ளது.

வசாவிளான் யாழ். விமான நிலைய ஓடுபாதை பக்க வீதி: கட்டுவன் சந்தி ஊடாக இந்த வீதியை திறப்பதன் மூலம் யாழ். சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கான தொடர்பை கணிசமாக மேம்படுத்த முடியும்.

காங்கேசன்துறை கீரிமலை வீதி: (ஜனாதிபதி அரண்மனை வீதி):

வரலாற்று மற்றும் கலாசார தளத்துக்கு செல்லும் இந்த வீதி மீண்டும் திறக்கப்படுவதால் உள்ளூர் சமூகங்கள் பயனடைவதுடன், இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்த முடியும்.


ஆகவே யாழ்ப்பாண மக்கள் அமைதி மற்றும் இயல்பு நிலைக்கான உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ள இச்சூழ்நிலையில் இந்த வீதிகளை மீண்டும் திறக்க அனுமதிப்பதால் நல்லிணக்கம் மற்றும் பிரதேச வளர்ச்சி வலுவடைவதுடன், எமது மக்களின் நீண்டகால கவலையை நிவர்த்தி செய்யப்பட்டு, அனைத்து பகுதிகளிலும் சமமான வளர்ச்சிக்கான உங்கள் நிர்வாகத்தின் அர்ப்பணிப்பை நிரூபிக்க முடியும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்


(28.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
எடுத்த முயற்சிகள் எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்கும் நேரம் இது. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் செல்வாக்கு மேலோங்கும்.



**ரிஷபம் :**
எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் நேரம் இது. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு நட்பால் நல்ல காரியம் நடைபெறும்.



**மிதுனம்:**
உத்தியோகம் மற்றும் தொழிலில் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்கும். ஒரு சிலருக்கு தொலைதூர பயணம் செல்லும் வாய்ப்பு உருவாக்கும்.



**கடகம்:**
ஒரு சிலருக்கு எதிர்பார்த்தபடியே இடமாற்றமும் கிடைக்கலாம். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ் கூடும்.



**சிம்மம்:**
வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும்.




**கன்னி:**
வியாபார விரோதங்கள் விலகும். புதிய கடை திறப்பு விழா கட்டிட திறப்பு விழா போன்றவை நடைபெற வழி பிறக்கும்.




**துலாம்:**
தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து மகிழ்ச்சி படுத்தும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மன குழப்பம் அதிகரிக்கும்.



**விருச்சிகம்:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ் கூடும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய அளவிற்கு லாபம் கிடைக்கும்.



**தனுசு:**
உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பர். வீட்டுக்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும்.



**மகரம்:**
வீட்டுக்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழுங்கள். பழைய வாகனங்களை கொடுத்து விட்டு புதிய வாகனம் வாங்கும் முயற்சி கை கூடும்.



**கும்பம்:**
கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதி மகிழ்ச்சிக்குரியதாக அமையும்.



**மீனம்:**
பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு விரயங்கள் கூடும்.

## புதிய அரசாங்கத்தின்... (03ஆம் பக்கத் தொடர்)

இதற்கமைய கண்டி நகர நீர் முகாமைத்துவ திட்டம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் கட்டம், தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கல், தேசிய ஒலிபரப்பு மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி திட்டம், அநுராதபுரம் வடக்கு நீர் திட்டத்தின் இரண்டாம் கட்டம், கிராம உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், களுகங்கை நீர் வழங்கல் திட்டம், சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் மேம்பாட்டு திட்டம் ஆகியன விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் ஜப்பானிய உதவியின் கீழ் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களில் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள ஹபரண வெயாங்கொடை மின் இணைப்பு வலையமைப்பு, அநுராதபுரம் வடக்கு நீர்வழங்கல் திட்டங்களை நிறைவு செய்ய எதிர்பார்த்திருப்பதோடு, முழுமைப்படுத்தப்பட்டுள்ள களனி கங்கை புதிய பாலத்தின் நிர்மாணப்பணிக்கான கொடுப்பனவை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும், ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி இதன்போது தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது இலங்கைக்கான ஜப்பானிய தூதரகத்தின் பிரதி தலைவர் நயோக்கி கமோஷிடா, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வேலைத்திட்டங்களுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் ஊழல், மோசடி ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கவும், இலங்கையின் தேவை அடிப்படையில் கடன்களை வழங்கவும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இதன்போது இணக்கம் தெரிவித்தது.

இலங்கைக்கான கொரிய தூதுவர் மியோன் லீ (Miyon Lee), பிரதி தூதுவர் சோன்கய் ஜியோங் (SongyiJ eong), KOICA இன் பணிப்பாளர் யுன்க்ஜின் கிம் (Myungjin Kim), பிரதி பணிப்பாளர்களான யோன்க்வன்கிம் (Yongwhan Kim), யுன்சூஜியோன் (YunsooJeon), DIMO இன் நிறைவேற்று அதிகாரி ரொஷான் சமரசிங்க மற்றும் இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பிரதி நிறைவேற்று அதிகாரி பீ.எம்.யூ.எஸ்.பன்னஹெக்க உள்ளிட்டோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

## பொலிஸ் பாதுகாப்பு... (03ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் அமைச்சரின் பாதுகாப்புக்காக 6 பொலிஸ் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் போராட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கூறப்படுவதால், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஆறு பொலிஸ் உத்தியோகத்தர்களை பாதுகாப்புக்காக வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி பாராடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்புக்காக 6 பொலிஸ் உத்தியோகத்தர்களும், அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புக்காக 6 பொலிஸ் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டனர். எவ்வாறாயினும், நேற்று (27) முதல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் அந்தந்த பணியிடங்களுக்கு சமுகமளிக்குமாறு பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. சில அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க இராணுவப் பாதுகாப்பும் ஈடுபடுத்தப்பட்டதுடன், அந்த அதிகாரிகள் தற்போது நீக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்ற அமைச்சர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் குழுவுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, மதத் தலைவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் கவனம் செலுத்தியுள்ளன.

## கப்ரால் உட்பட 5 பேருக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தால் குற்றப்பத்திரிகையில் கையெழுத்திடப்பட்ட தினம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டனர்.

தொழில்நுட்ப கோளாறை நிவர்த்தி செய்து ஆணைக்குழுவால் கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமையவே இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் பிரதி ஆளுநர் தர்மசேன தீரசிங்க, தொன் வசந்த ஆனந்த சில்வா, சந்ரசிறி ஜயசிங்க பண்டித சிறிவர்தன, எம்.ஏ.கருணாரத்ன ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு தெரிவித்து மேற்படி நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

**வாச்சிக்குடா விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட பொதுச் சின்னம் ஒன்றே சாத்தியமான பாதை என்பதை அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

கடந்தகால வரலாறுகள் இதற்கு சான்றாக அமைந்துள்ளதை நாம் அறிவோம். ஆகவே சகல கட்சிகளும் தங்களது வேட்பாளர்களை பங்கீடு செய்து ஒரு சின்னத்தில் போட்டியிட முன்வரவேண்டும்.

இதனை சகல கட்சிகளுக்கும் வலியுறுத்துவதற்கான கலந்துரையாடல்கள் ' அம்பாறை மாவட்ட தமிழர் ஒருங்கிணைப்புக் குழு' வினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புதிய அரசாங்கம் நாட்டில் உருவாகியுள்ள நிலையில் ஒன்றாய் இணைந்து அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளை பெற்றுக்கொள்ள தமிழ் பிரதிநிதித்துவம் என்பது அவசியம் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் பல கட்சிகளும் பிரிந்து நின்று செயற்பட ஆயத்தமாகிவருகின்றனர். தங்களுக்கு விரும்பிய வேட்பாளர்களை களத்தில் இறக்கி வெற்றி பெறலாம் எனும் நம்பிக்கையுடன் செயற்பட்டுவருகின்றனர். அம்பாறை மாவட்டத்தை பொறுத்தவரையில் அது சாத்தியமற்றது என்பதை அனைவரும் அறிவோம்.

இதேநேரம் இத்தேர்தலில் இளைஞர்களை உள்ளடக்கிய புதியவர்களின் வருகையினை இளைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் அதிகளவான புத்திஜீவிகளும் எதிர்பார்க்கின்றனர். இந்த எதிர்பார்ப்பை கட்சிகள் கவனத்தில் கொள்ளாது விடின் அவர்கள் பெரும்பான்மை கட்சிகளை நோக்கி நகர்ந்துவிடுவர் என்பதையும் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனைய மாவட்டங்களை போலன்றி சுமார் 85000 ஆயிரம் தமிழர் வாக்குகளை கொண்ட அம்பாறை மாவட்டத்தில் பிரிந்து நின்று வெற்றி பெறலாம் என்பது பகல் கனவே. ஆகவே இதனை உணர்ந்து கட்சிகள் ஒன்றுபடவேண்டும். இல்லையேல் மக்கள் தக்க பதிலை வழங்குவர் என அம்பாறை மாவட்ட தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

## மட்டக்களப்பில் பாரிய தீ விபத்து

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏத்தாளைக்குளம் காட்டுப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏத்தாளைக்குளம் காட்டுப்பகுதியில் தீ சம்பவம் ஏற்பட்டுள்ளது. ஏத்தாளைக்குளம் மற்றும் அதனை அண்டிய பகுதியானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயமாகவும் பறவைகள் சரணாலயமாகவும் இருந்துவருகின்றது.

இந்நிலையில் அப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தை தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த களுவாஞ்சிகுடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை உத்தியோகத்தர்கள் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் காரணமாக தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது.இதனால் பாரிய சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதிக்கு வருகைதந்த வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களும் தீ விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தீ சம்பவம் விபத்தா அல்லது திட்டமிட்ட செயலா என்பது தொடர்பில் தகவல்கள் இதுவரையில் வெளிவரவில்லை. இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மாலையர் கட்டு கிராமத்திற்குள் நுழைந்த காட்டுயானைகள்

மாலையர் கட்டு கிராமத்திற்குள் நுழைந்த காட்டுயானைகள் அங்குள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருபது அடி நீளமான சுற்றுமதிலை சேதப்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு போரதீவுப் பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் இப்பாடசாலை அமைந்துள்ளது. இது அதி கஷ்டப் பிரதேச பாடசாலையாக விளங்குவதுடன் அடிக்கடி காட்டுயானைகளின் தாக்குதலுக்கும் இலக்காகி வருகிறது. கடந்த இரு தடவைகள் இப்பாடசாலை சுற்றுமதில் காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்தது.



மாலையர் கட்டு கிராமத்தில் வசிக்கும் மக்கள் விவசாயம், சேனைப்பயிர் செய்கைகளை செய்தே வாழ்க்கை நடத்துகின்றனர். மிகவும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்கள் இங்கு தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

இதனால் தங்களது வாழ்வாதாரம், பெறுமதியான பாடசாலை கட்டடங்கள், வீடுகள் ஆகியவற்றையும் இழந்தும் வருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு சேதமடைந்துள்ள பாடசாலை சுற்று மதிலை மீள நிர்மாணிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய உற்சவம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மகா பாரத இதிகாசத்துடன் தொடர்புடைய கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பூர்வாங்க கிரியைகள், ஊர்க்காவல் பண்ணல், கடல் குளித்தல், கொடியேற்றம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகவுள்ளது.

மகாபாரத போரை நினைவு கூறும் முகமாக தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் முக்கிய நிகழ்வுகளாக 03ஆம் திகதி மூன்றாம் நாள் மகாபாரத இதிகாச ஏடு திறத்தல், 07 ஆம் திகதி ஏழாம் நாள் ஸ்ரீ கிருஸ்ணர் துவாராகபுரியிலிருந்து அத்தினாபுரத்திற்கு செல்லும் சுவாமி எழுந்தருளப்பண்ணல், 08ஆம் திகதி எட்டாம் நாள் அதிகாலை நாட்கால் வெட்டுதல், பன்னிரெண்டாம் நாள் 12 ஆம் திகதி காலியாணக் கால் வெட்டுதல், பதினாறாம் நாள் 16 ஆம் திகதி கிருஸ்ணர், பாண்டவர்கள், திரௌபதை தேவாதிகள் சகிதம் வனவாசம் செல்லுதல், பதினொழாம் நாள் 17 ஆம் திகதி அருச்சுனன் பாசுபதம் பெறுவதற்காக தவநிலை செல்லுதல், அரவாணைகளப்பலி கொடுத்தல், பதினெட்டாம் நாள் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தீப்பள்ளயத்தின் சிகரம் என போற்றப்படும் தீ மிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது. மறுநாள் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை பாற்பள்ளயம், தருமருக்கு முடிசூட்டுதல் தீக்குளிக்கு பால்வார்க்கும் நிகழ்வு நடைபெற்று அன்று இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன் ஆலயத்திலிருந்து ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு அம்மன் முத்துச்சப்புறத்தில் எழுந்தருளி ஊர்வலம் செல்லும் நிகழ்வுடன் உற்சவம் இனிதே நிறைவுபெறவுள்ளது.



## கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் மீலாதுன் நபி விழா




கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் முஹம்மது நபி(ஸல்) பிறந்த தினத்தையொட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மீலாதுன் நபி விழா நிகழ்வுகள் அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எம்.ஐ.அப்துல் றஸாக் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மார்க்க உபநியாசம் மார்க்க அறிஞர்களால் நிகழ்த்தப்பட்டதுடன், அன்னதானமும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். **மாளிகைக்காடு குறூப் நிருபர்**

## சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு பிரிவுபசார நிகழ்வு

**காரைதீவு குறூப் நிருபர்**

சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தனது 60ஆவது வயதில் ஓய்வுபெறுவதை முன்னிட்டு வலயக்கல்விப் பணிமனையில் பிரிவுபசார நிகழ்வு நேற்று (27) நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் நிர்வாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம். வை. யாசீர் அரபாத் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

பிரதம அதிதியாக ஓய்வு பெறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.அவருடன் அவரது மைத்துனர் ஓய்வு நிலை அதிபர் கே.புண்ணியநேசன் புத்திரி எஸ்.டிவானுஜா ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோபரா, எச். நைரூஸ்கான், ஏ.எல்.நாசீர்அலி, . ஏஎம்.சியாட் ,கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம்.மகுமூத்லெவ்வை ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் எஸ்.சிவேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் உசைமா பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி கௌரி அருள்கடாட்சம் உள்ளிட்ட கல்விசார் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## செட்டிப்பாளையத்தில் மரக்கறி லொறி விபத்து

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் மரக்கறிகளை ஏற்றிச் சென்ற லொறியொன்று, செட்டிப்பாளையம் பகுதியில் வைத்து விபத்துக்குள்ளானது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தொலைபேசிக் கம்பத்தில் மோதியமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனம் சேதமடைந்துள்ளதுடன் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## அம்பாறை மாவட்டத்தில் தமிழர் தரப்பில் ஒரு அணியே போட்டியிட வேண்டும்

**காரைதீவு குறூப் நிருபர்**

பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் தரப்பிலே எந்த கட்சி பேதமும் இன்றி ஒரு அணியே போட்டியிட வேண்டும் என்ற கருத்து பரவலாக பேசப்பட்டு வருகின்றது. அது சமூக வலைத்தளங்களில் அனைவராலும் பதிவிடப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேசரீதியாக அதாவது பொத்துவில் திருக்கோவில் ஆலையடிவேம்பு காரைதீவு சம்மாந்துறை மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களில் மக்கள் மனங்களில் இடம்பிடித்த சேவை மனப்பான்மை உள்ள நபர்களை உள்ளடக்கிய ஒரு வேட்பு மனுவை எல்லோரும் சேர்ந்து தயாரித்து போட்டியிடுவது சிறந்தது இதில் கட்சி பேதங்கள் அனைத்தும் இல்லாமல் பொதுவாக களம் இறங்குவது சிறப்பாகும்.

அம்பாறை மாவட்டத்தை பொறுத்தவரை தற்போதையகள நிலையில் கட்சி சார்பாக பொதுத் தேர்தல் களம் இறங்குவது மிகவும் பின்னடைவை ஏற்படுத்தும். ஏனெனில் எங்களது கட்சிக்குள்ளே பல்வேறுபட்ட பிரிவுகள் காணப்படுவதுடன் ஏனைய கட்சிகளும் வெவ்வேறு சின்னங்களில் போட்டியிட்டால் எங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும். எனவே அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து பொதுவான ஒரு கட்டமைப்பின் கீழ் போட்டியிடுவது மிகவும் சாலச் சிறந்ததாக அவர் தெரிவித்தார்.

## பாடசாலை மாணவர்களுக்கு முச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள மல்லிகைத்தீவு பாடசாலை மாணவர்களுக்கு 23 சைக்கிள்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

பாடசாலை அதிபர் எஸ்.ஜதீஸ்வரர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எ.எல்.நாசிர் அலி, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மல்லிகைத்தீவு கிராமத்திலிருந்து மல்வத்தை விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு மூன்று கிலோமீற்றர் தினமும் நடந்து சென்று வர வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிகழ்வில் அதிதிகள் அனைவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை நடவடிக்கைகளை தடைசெய்யுமாறு கோரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை செய்யப்படுவதை தடைசெய்யுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுச் சந்தைகள், மற்றும் நடமாடும் மீன் விற்பனை செய்யும் வியாபாரிகள் பழுதடைந்த மீன்களை புதிதாகக் காட்டுவதற்காகவும் நிறை மோசடி செய்வதற்காகவும் மண் கலப்படம் செய்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு நிந்தவூர் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை செய்யப்படுகின்றது.

மண் கலப்படத்தில் தூய்மை அற்ற பகுதிகளில் இருந்து எடுக்கப்படும் மண் இவ்வாறு கலக்கப்படுவதாகவும் இதனால் சமையலுக்கு பின்னரும் மீன்களில் மண் காணப்படுவதாகவும் இது பாரிய சிரமங்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மீன்களை புதிதாகக் காட்டுவதற்காகவும் நிறையை மோசடி செய்வதற்காகவும் மண் கலப்படம் செய்து பழுதடைந்த மீன்களை விற்பனை செய்துவரும் வியாபாரிகளுக்கெதிராக எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுள்ளனர்.

## சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு சடங்கு

**சம்மாந்துறை நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு சடங்கு வைபவத்தின் பாற்குடபவனி நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குடபவனி ஆலய துணை பூசகர் நிரோஜன் முன்னிலையில் நடைபெற்றது.

இச்சடங்கு கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு நடைபெற்று, அக்டோபர் மாதம் 03 ஆம் திகதி தீ மிதிப்பு வைபவம் நிறைவுபெறவுள்ளது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குமார குலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்கு நடைபெற்று வருகின்றது .

தினமும் பகல் பூசை 1.00 மணிக்கும், இரவு பூசை 7 மணிக்கும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வருகிறார்.

03 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு நடைபெற்று தீ மிதிப்பு வைபவம் நடைபெறும் .

கூடவே அன்று அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இறுதியாக 10ஆம் திகதி வியாழக்கிழமை இரவு எட்டாம் நாள் வைரவர் இடும்பன் திருச்சடங்கு நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபைத்தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

# வடக்கு மாகாண ஆளுநராக நாகலிங்கம் வேதநாயகன் பதவியேற்பு

(யாழ். விசேட நிருபர்

ஊழலற்ற மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கு புதிய ஜனாதிபதி கிடைத்தமை இறைவனின் செயல் என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட நாகலிங்கம் வேதநாயகன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது கிடைத்துள்ள ஜனாதிபதியால் நாம் எவருக்கும் பயப்படாது மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும்.



இவர் ஜனாதிபதியாக வந்ததால் மாத்திரமே நான் இந்த பதவியை பெற்றுக் கொள்கிறேன்.

வேறு எந்த ஜனாதிபதி வந்திருந்தாலும் இந்த பதவி எனக்கு கிடைத்திருக்கவும் மாட்டாது வேறொருவர் எனக்குப் பதவியை தந்திருந்தாலும் நான் இதனை ஏற்றுக் கொண்டிருக்கவும் மாட்டேன் என தெரிவித்தார்.

# நாடாளுமன்ற தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது

## தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பினர் கலந்துரையாடல்

(யாழ். விசேட நிருபர்)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பாக தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் கலந்துரையாடியிருந்தனர்.

தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் கட்சிகள் கடந்த (25) புதன்கிழமை கலந்துரையாடிய நிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது கட்டமாக இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.



குறித்த கலந்துரையாடலில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பொதுச் செயலாளர் கோவிந்தன் கருணாகரன், ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் மக்கள் கூட்டணியின் பொருளாளர் வி.பி.சிவநாதன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் க.துளசி, அரியநேத்திரன், அரசியல் ஆய்வாளர்களான ம.நிலாந்தன், யதீந்திரா உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். குறித்த கலந்துரையாடலில் எந்த சின்னத்தில், நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது என்பது தொடர்பிலேயே முக்கியமாக பேசப்பட்டதாகவும், இறுதி முடிவு எட்டப்படவில்லை எனவும் ஓரிரு நாட்களில் முடிவு எடுக்கப்பட்டுவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சங்கு சின்னத்தில் போட்டியிடுவதா அல்லது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பாக குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடுவதா என்பது தொடர்பிலேயே பேச்சுக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாதஸ்வர வித்துவான் உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த நாதஸ்வர வித்துவான் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நாதஸ்வர வித்துவான்களில் ஒருவரான, திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த பாலசேகர் ஹரிபிரசாத் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி இரவு முல்லைத்தீவு பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் நாதஸ்வர கச்சேரி நிகழ்வை முடித்துக்கொண்டு, மறுநாள் 15ஆம் திகதி காலை மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை சாவகச்சேரி பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

## வடக்கின் உதயம்

# தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் எம்மோடு இணையலாம் – ஆனந்தசங்கரி

தமிழரசுக்கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டு பலர் பிரிந்து போயுள்ள நிலையில், அந்த கட்சியின் அதிருப்தியாளர்கள், அல்லது அந்த கட்சியில் இருந்து விலகியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணையலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழ் பொதுக் கட்டமைப்பு பாராளுமன்ற தேர்தலில் "சங்கு" சின்னத்தில் போட்டியிடாமல், பிறிதொரு பொது சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருவதாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் பேசுச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் கிடைத்த தகவலை உறுதி செய்வதற்காக வி.ஆனந்தசங்கரியை தொடர்பு கொண்ட போது, "ஆயுதம் தாங்கி போராடிகறை படிந்தவர்களை தமது கட்சியில் இணைக்கமாட்டோம், தமிழரசுக் கட்சியில் மாவை சேனாதிராஜா தவிர்ந்த வேறு எவர் தமது கட்சியில் இணைய வந்தாலும் அதற்கு இடம் வழங்கப்படும்" அத்தோடு பொது கட்டமைப்பில் உள்ள கட்சிகளோடு இணைந்து தேர்தலில் போட்டியிடுவது சாத்தியமற்றது எனவும் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி சின்னத்தில் யார் பாரளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது, யார் கூட்டணி அமைப்பது என்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளதாகவும், எதிர்வரும் நாட்களில் அந்த விடயங்கள் தொடர்பில் மேலதிக தகவல்கள் வழங்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இளைஞர்களுக்கு வழிவிடும் வகையில் சி.வி தேர்தல் அரசியலில் இருந்து விலகுகிறார்

(யாழ். விசேட நிருபர்

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் இளைஞர்களுக்கு வழிவிடும் வகையில் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடமாட்டார் என கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, நவம்பர் 14 ஆம் திகதியன்று பாராளுமன்ற தேர்தல் நடாத்தப்படவுள்ள நிலையில் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணியின் கட்சியினரிடையே நடைபெற்ற கூட்டத்தில் குறித்த தகவலை விக்னேஸ்வரன் தெரிவித்தாரென அறிய முடிகிறது.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் அரசியலில் பிரவேசித்து வடக்கு மாகாண முதலமைச்சராக தெரிவான விக்னேஸ்வரன், 2019 நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றுக்கு தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய ஆளுநருக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்து

9வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகத்திற்கு ஆளுநர் நியமனத்தை வழங்கி உள்ளார். இதனை முன்னிட்டு வடமாகாண ஆளுநருக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதாக அதன் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிபராக அவர் பதவி வகித்த காலத்தில் மிகுந்த நேர்மையாகவும் மக்களுக்காக அர்ப்பணிப்புடனுமான சேவையிலும் ஈடுபட்டவர் என்பது தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம். அவரது அந்த உண்மையான



உழைப்புக்கும் நேர்மைக்கும் இந்த ஆளுநர் பதவி கிடைத்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அவரது சேவை தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என்று அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் தீவில் காற்றாலை மின்சாரம், கனிய மணல் அகழ்வை தடுத்து நிறுத்தவும்

## ஜனாதிபதி, பிரதமருக்கு கடிதம் அனுப்பி வைப்பு

(மன்னார் குறூப்நிருபர்)

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயல்பாடுகளை நிறுத்தக் கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அழுத்தத்தை கொடுக்கும் வகையில் தபால் அட்டை மூலம் கோரிக்கைகள் முன் வைக்கும் நடவடிக்கை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை (27) காலை மன்னாரில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன்பிகிராடோ தலைமையில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான குறித்த தபாலட்டை அனுப்பும் நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள், மத தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு தபாலட்டைகளை அனுப்பிவைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வந்தனர்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களிடமும் கோரிக்கைகளை முன்வைத்த போதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு குறித்த திட்டத்தின் பாதகத்தையும், இத்திட்டம் மக்களுக்கு எதிரானது என்பதை வலியுறுத்தும் வகையிலும் கொழும்பில் உள்ள அலுவலகங்களுக்கு மக்களின் கோரிக்கை அடங்கிய தபால் அட்டைகள் இவ்வாறு அனுப்பி வைக்கப்படுகிறது. புதிய ஜனாதிபதி தனது தேர்தல் பிரச்சாரங்களின் போது மன்னார் தீவில் அமைக்கப்படும் காற்றாலை மின்சார திட்டத்தை தான் ஜனாதிபதியாக வந்தால் குறித்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக கூறியிருந்தார்.



இந்த நிலையில் இதனை வலியுறுத்தும் வகையிலும் குறித்த தபாலட்டை அனுப்பி வைக்கப்படுகிறது. மக்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கை அடங்கிய தபாலட்டைகள் மன்னார் தபாலகம் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# குவியம் விருதுகள்

(யாழ். விசேட நிருபர்)

இலங்கைத் தமிழ் சினிமாக் கலைஞர்களுக்கான விருது விழாவான "குவியம் விருதுகள் 2024" நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் கலைஞர்களுக்கான செங்கம்பள வரவேற்பைத் தொடர்ந்து விருது வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகி, பல கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறவுள்ளன.

இவ்விழாவில், முழு நீள திரைப்படங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள் மற்றும் காணொளிப்பாடல்களுக்காக விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்த விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்கமைய கிடைக்கப்பெற்ற நூற்றுக்கணக்கான படைப்புக்களிலிருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை ஈழத்து முதுபெரும் இசை கலைஞர் கலைவாணர் கண்ணன் மாஸ்டருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

அத்துடன் ஈழ தமிழர்களுக்கு உலகெங்கும் பெருமை தேடித்தந்த ஈழத்துக் குயில் என அழைக்கப்படும் பிரபல பாடகி கில்மிஷாவிற்கும் கௌரவிப்பும் விருதும் வழங்கி வைக்கப்படவுள்ளது.

மூன்றாவது தடவையாக இடம்பெறவுள்ள குவியம் விருதுகள் நிகழ்வில் மேலும் பல சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

# "மாற்றத்திற்கான மாற்று வழி" திறந்த உரையாடலுக்கு அழைப்பு

(மன்னார் குறூப் நிருபர்)

மாற்றத்திற்கான மாற்று வழி தொடர்பாக திறந்த உரையாடல் இன்றைய தினம் சனிக்கிழமை (28) வவுனியா வாடி வீட்டில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள நிலையில் வடகிழக்கு பகுதியிலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்வியலாளர்கள், சமூக சிந்தனையாளர்கள், அரசியல் ஆர்வலர்கள், குறிப்பாக மாற்றத்தை விரும்பும் இளையோர்கள் அனைவரையும் கருத்து பகிர்வில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர், நேற்று (27) ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,,,

கடந்த பல தசாப்தமாக தொழில் முறை அரசியல்வாதிகளால் தமிழ்த் தேசிய அரசியலை விடுதலை அறவுணர்வின்றி தமிழ் மக்களின் நீண்ட கால இருப்பு பற்றிய தொலை நோக்கு சித்தாந்தமின்றி தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு வலிமையான கோட்பாடின்றி கட்சி கட்டமைப்புகளிலும் மாற்றமின்றி அறிவார்ந்த அணுகுமுறை இன்றி தமது நலன் சார்ந்து தொடர்ந்து செயல்படுவதால் மக்கள் மத்தியிலே வெறுப்புணர்வு ஏற்பட்டு பல கூறுகளாக பிரிவடைந்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் இரண்டகமான செயல்பாடு அனைவரையும் விசனத்துக்கு உள்ளாக்கியது.

இந்த நிலை தொடர்ந்தால் தமிழ் மக்களின் எதிர்கால இருப்பு சிங்களத்திற்குள் கரைந்து விடும் ஆபத்து உண்டு.

தமிழர் தேசம், தேசியம் வலுகுன்றாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு.

எனவே மாற்றத்திற்கான மாற்று வழி தொடர்பாக திறந்த உரையாடலுக்கு வடகிழக்கு பகுதியிலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்வியலாளர்கள், சமூக சிந்தனையாளர்கள், அரசியல் ஆர்வலர்கள், குறிப்பாக மாற்றத்தை விரும்பும் இளையோர்கள் அனைவரையும் கருத்து பகிர்விற்கு உரிமையுடன் அழைக்கிறோம்.என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இருப்பை பாதுகாக்க தமிழ்க்கட்சிகள் அணிதிரளுங்கள்: சிவமோகன் அழைப்பு!

(வவுனியா விசேட நிருபர்)

எதிர்வரும் தேர்தலில் சகல கட்சிகளும் ஒற்றுமை என்று சொல்லி காலத்தை வீணடிக்காமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் ஒன்றாக போட்டியிடவேண்டும் என முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (26/09) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எதிர்வரும் பொதுத் தேர்தலானது தமிழர்களின் ஒன்றுமையை வலுப்படுத்தி இருப்பை காக்கவேண்டிய ஒரு தேர்தல். அந்த ஒற்றுமையை வலியுறுத்தும் வண்ணம் முன்னாள் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என 11 பேர் மாவை சேனாதிராஜாவை சந்தித்து கலந்துரையாடினோம்.

சகல கட்சிகளையும் உள்வாங்கி தமிழ் தேசிய கூட்டமைப்பாக தமிழ்த் தேசிய அணியாக செயற்படுவதனை வலியுறுத்தியே அந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. எனவே அனைத்து கட்சிகளும் ஒற்றுமை என்று சொல்லி காலத்தை வீணடிக்காமல் தமிழ்த் தேசியகூட்டமைப்பாக தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னத்தில் ஒன்றாக போட்டியிடவேண்டும். இது எனது சொந்த கருத்தாக இருந்தாலும் தமிழரசுக் கட்சியின் அதிகமானோரது நிலைப்பாடும் இதுவே.

இது தொடர்பான இறுதி முடிவினை எமது கட்சியின் மத்திய குழு விரைவில் எடுக்கும். மாவை சேனாதிராஜா அவர்கள் ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுத்து அதனை எமது மத்திய குழுவிற்கு அறிவிப்பார். மிக குறுகியகாலமே எமக்கு உள்ளது. எனவே விவேகமாக சிந்திக்கவேண்டும். பிரிந்து நின்று தேர்தலினைச் சந்தித்தால் தமிழர்களது இருப்பு கேள்விக்குறியாக்கப்படும்.

பாராளுமன்றுக்கு புதியவர்கள் தேவை இளைஞர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பது உண்மை. அதேநேரம் பாராளுமன்றில் தமிழ்த் தேசிய இருப்பை தக்கவைப்பதற்கு ஆளுமையான அனுபவமுடைய மூத்தவர்களும் தேவை.

கடந்த காலங்களில் பங்காளிக் கட்சிகளுக்கு வன்னி மாவட்டத்தில் அதிகமான ஆசனங்கள் கொடுக்கப்பட்டு யாழ் மாவட்டத்தில் கொடுக்கப்படாத நிலமை இருந்தது. அதனை ஒற்றுமையாகவே நாம் செய்தோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு கட்சிகள் மேலோங்கி இருக்கிறது. அது ஒரு தீர்க்கப்படமுடியாத பிரச்சினை அல்ல.

அத்துடன் தமிழர்களது விடயங்களை முன்னிலைப்படுத்தி கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களில் அரசாங்கத்துடன் இணங்கி செல்லவேண்டிய நிலைமையும் ஏற்படும் அது தொடர்பாக பரிசீலிப்போம்

இதேவேளை, மதுபான நிலையத்திற்கான அனுமதிப் பத்திரத்தை தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டனர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரங்களை இதுவரை நான் பார்க்கவில்லை. அது இன்றுவரை எமது கைகளில் கிடைக்கவில்லை என்றார்.




# சீன பல்கலை மாணவர்கள் கண்டிக்கு சுற்றுலா விஜயம்





(அக்குறணை குறூப் நிருபர்)

பேராதனை மற்றும் வயம்ப பல்கலைக்கழகங்களின் ஏற்பாட்டில் சீன பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று நேற்று முன்தினம் (26) கண்டிக்கு விஜயம் செய்துள்ளது.

சீனாவின் பீஜெய் பல்கலைக்கழக மாணவர் குழுவினரே, கண்டி மாட்டத்திலுள்ள கடுகண்ணாவ முதலிவத்தை சுற்றுலா பிரதேசத்துக்கு இவ்வாறு விஜயம் செய்துள்ளனர்.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனகா ஹேரத்தின் வழிகாட்டுதலுக்கமைய மாகாண சுற்றுலா திணைக்களம் இதற்கான அனுசரணையை வழங்கியது.

சீனாவின் பீஜெய் பல்கலைக்கழக மாணவர்கள், கண்டி, பலன என்ற இடத்தில் அமைந்துள்ள புராதன கோட்டை, விவசாய மற்றும் தேயிலை உற்பத்தி போன்ற பல்துறை விடயங்களை பார்வையிட்டனர். இதன்போது, வயம்ப பல்கலைக்கழக பேராசிரியர் விஸ்வஜித் கந்தேகமவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் 03 நாட்கள் நீர் விநியோகம் தடை

## மகாவலி கங்கைக்கு செல்வோர் அவதானம்



இரண்டு வருடங்களின் பின் இடம்பெறும் பராமரிப்பு மற்றும் திருத்தப்பணிகள் காரணமாக பொல்கொல்ல நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று (27) நள்ளிரவு முதல் முற்றாக நீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அங்கிருந்து நீர் விநியோகிக்கப்படும் பகுதிகளுக்கு இன்று (28) அதிகாலை 1.00 மணிமுதல் நாளை மறுதினம் 30ஆம் திகதி மாலை 6 மணி வரை 65 மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தடை செய்யப்படவுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கண்டி மாநகர சபைக்குட்பட்ட பகுதிகள், ஹரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, பாத்ததும்பர, அக்குறனை, ரஜவெல்ல, சிறிமல்வத்த, அம்பிட்டிய, அமுனுகம மற்றும் ஹந்தானை ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், குறித்த நீர்த்தேக்கத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரானது மகாவலி கங்கைக்கு விடுவிக்கப்படவுள்ளமையினால், குறித்த ஆற்றில் மீன்பிடிப்பதனையும் ஆற்றினுள் இறங்குவதையும் தவிர்க்குமாறு மகாவலி அதிகார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

# மண்சரிவால் தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலை

மஸ்கெலியா நிருபர்

நோட்டன் பிரிட்ஜ் விதுலிபுர சிங்கள மகா வித்தியாலயத்துக் கருகில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இப் பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

வித்தியாலயத்துக்கு அருகாமையிலுள்ள கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள நிலப்பரப்பில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலையின் அதிபர் சுகந்த மாலினி குமாரி தெரிவித்தார். ஹட்டன் கல்வி வலய பணிப்பாளருடன் கலந்துரையாடி இந்த தீர்மானத்தை எடுத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பலத்த மழை மற்றும் காற்றினால் வெள்ளத்தில் மூழ்கிய புத்தல நகரம்

(ஊவா வெல்லஸ்ஸ நிருபர்)



புத்தல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நிலவிய கடும் காற்றுடன் கூடிய பலத்த மழை காணரமாக அப்பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியது.

இதனால் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டதுடன், அப் பிரதேச மக்களும் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

இது தொடர்பாக புத்தல பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஆர். எஸ்.திலகரத்னவிடம் வினவிய போது,

புத்தல நகரம் ஒவ்வொரு ஆண்டும் மழைகாலங்களில் வெள்ளத்தில் மூழ்குறது. இந்த நகரம் மிகவும் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது. போதுமான வடிகால் வசதி இன்மையால் மழை காலங்களின்போது ஏனைய பகுதிகளிலிருந்து ஓடும் வெள்ளநீர் புத்தல நகத்துக்குள் உள்நுழைவதனால் நகரம் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்றது.

எனவே, இனி வரும் காலங்களிலாவது நகருக்குள் பாயும் வெள்ளநீரை முறையான திட்டத்தின் கீழ் வெளியேற்ற புதிய வடிகால் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் இதற்கான புத்தல பிரதேச சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமதியான

# தங்க நகைகளை உரிமையாளரிடம் ஒப்படைத்த முச்சக்கரவண்டி சாரதி

தலவாக்கலை குறூப் நிருபர்



தனது முச்சக்கர வண்டியில் பயணித்த தம்பதிகள் தவறி விட்டுச் சென்ற சுமார் இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமையான தங்க நகைகளை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைத்த முச்சக்கர வண்டி சாரதியின் செயல் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டப் பகுதியைச் சேர்ந்த ஜானகிராமனின் (பண்டா) என்ற இளைஞனே இவ்வாறு தங்க நகைகளை உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்ட தொழிற்சாலையில் உத்தியோகத்தராக கடமையாற்றும் விஜயகாந்த் என்பவரும் அவரது மனைவியும் தலவாக்கலை நகரில் அமைந்துள்ள நகைக் கடையொன்றில் இரண்டு தங்க காப்புகளை வாங்கிக்கொண்டு இந்த இளைஞனின் முச்சக்கரவண்டியில் வீடு திரும்பியுள்ளனர்.

இதன்போது, தாம் வாங்கிச் சென்ற தங்க நகைகளை முச்சக்கர வண்டியிலேயே தவறவிட்ட நிலையில், செய்வதறியாது நகைகளை தேடி அலைந்து திரிந்துள்ளனர்.

இந்நிலையில், தனது முச்சக்கரவண்டியில் கிடந்த தங்க காப்புகளை, உரியவர்களின் வீடு தேடி வந்து முச்சக்கரவண்டியின் சாரதி பத்திரமாக ஒப்படைத்துள்ளார்.

முன்மாதிரியாக செயற்பட்ட ஜானகிராமன் (பண்டா) என்ற முச்சக்கர வண்டி சாரதியின் நேர்மையான செயலை பிரதேச மக்கள் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு

# ஸ்ரீ.ல.சு கட்சியின் கண்டி மாவட்ட தமிழ் அமைப்பாளர் வாழ்த்து



இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநயக்கவுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட தமிழ் அமைப்பளர் தேசகீர்தி மு.தீபன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வெற்றி சுமார் 57 வருடங்களுக்கு பின்னர் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். எனவே சிறுபான்மை என்ற ரீதியிலும் தமிழ் மக்களின் ஒரு பிரதிநிதியாகவும் ஜனாதிபதிக்கு மீண்டும் மீண்டும் வாழ்த்துக்களை கூறிக்கொள்ளவிரும்புகிறேன் .

மலையகத்திலுள்ள குறிப்பாக, இளைஞர்களின் வேலைவாய்ப்பு பிரச்சினை மற்றும் வீட்டுரிமை பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், பல வருடங்களாக கண்டி மாநகரத்தில் மாகியாவ கிராமத்தில் நிலவும் வீட்டுரிமை பிரச்சினையை தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் நான் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

# சப்ரகமுவ மாகாண புதிய ஆளுநர் கடமைகளை பொறுப்பேற்றார்





காவத்தை தினகரன் விசேட நிருபர்

சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன நேற்று (27) உத்தியோகப்பூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண சபை தலைவர் கஞ்சன ஜயரத்னவும் கலந்துகொண்டார்.

சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட தலைவர் சாந்த பத்மகுமார, தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.





ஊவா மாகாணத்தின் புதிய ஆளுநராக, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்ட, இலங்கை நிர்வாக சேவை அதிகாரியும் சட்டத்தரணியுமான கபில ஜயசேகர, நேற்று முன்தினம் (26)பதுளையில் அமைந்துள்ள ஆளுநர் காரியாலயத்தில் தனது கடமையினை பொறுப்பேற்றதையும், ஊவா மாகாண பிரதம செயலாளர் தமயந்தி பரணகம உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்பதையும் படங்களில் காணலாம். (படம்: ஊவா சுழற்சி நிருபர்)

# கண்டி, இந்தியத் தூதரக நிதியில் கிரிக்கெட் பயிற்சி வலை திறப்பு






(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டியிலுள்ள உதவி இந்தியத் தூதுவராலயத்தினால், கண்டியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட கிரிக்கெட் பயிற்சி வலை நேற்று முன்தினம்(26) திறந்து வைக்கப்பட்டது.

கண்டி, திகனையில் அமைந்துள்ள மத்திய மாகாண விளையாட்டு மைதானத்துக்கு கிரிகெட் பயிற்சி வலையொன்று கண்டியிலுள்ள உதவி இந்தியத் தூதுவராலயத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இதனை மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க மற்றும் கண்டி உதவி இந்தியத் தூதுவர் டொக்டர் எஸ்.ஆதிரா இணைந்து இதனை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் விளையாட்டுத் திணைக்கள அதிகாரிகள், விளையாட்டுத்துறை வல்லுனர்கள் மற்றும் கண்டியிலுள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகர் அலுவலகப் பணியாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# மகாவலி ஆற்றில் காணாமற்போன இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

பொல்கொல்லை நீர்த்தேக்கத்துக்கு கீழ் மகாவலி ஆற்றில் நீராடச் சென்று காணாமல்போன இரு இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 25ஆம் திகதி மகாவலி ஆற்றில் நீராடச்சென்ற ஐந்து இளைஞர்களில் இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர்.

அதனையடுத்து, அந்த இருவரை தேடும் பணியில் வத்துகாமம் பொலிஸார் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, காணாமற்போன இருவரில் ஒருவரது சடலம் நேற்று முன்தினம் (26) மாலை மீட்கப்பட்டுள்ளதுடன், நேற்று (27) காலை மற்றைய இளைஞரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இரு இளைஞர்களும் 19 மற்றும் 20 வயதுடைய வத்துகாமம் குன்னேபான பிரதேசத்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களது உடல்கள் நேற்று(27) கண்டி தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 5,240 கஞ்சா செடிகளை அழித்த பொலிஸார்

# கஞ்சா பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது



ஹம்பேகமுவ, மைலவல பிரதேசத்தில் கஞ்சாசெடிகளை பயிரிட்டிருந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, ஒரு ஏக்கர் காணியில் பயிரிடப்பட்டிருந்த ஐந்தாயிரத்து 240 கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனை வெட்டி அகற்றிய பொலிஸார், கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொண்ட அதேபிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேகநபரொருவரையும் கைதுசெய்துள்ளனர். இவ்வாறு, வெட்டி அகற்றப்பட்ட கஞ்சா செடிகளுடன், சந்தேகநபர் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொரளை சீவலி மத்திய மகா வித்தியாலய 90 வருட பூர்த்தியை கொண்டாடும் முகமாக கிரிக்கெட் சுற்றுப் போட்டி




Golden Legends Eagles 50 to 90 அணியை சேர்ந்த சந்தன தனபால, இறுதிப் போட்டியின் நாயகனாகவும் சுற்றுப்போட்டிகளின் நாயகனாகவும் இரேஷ் குணசேகரவிடமிருந்து கிண்ணத்தை பெற்றுக்கொண்டார்




Golden Legends Eagles 50 to 90 அணியை சேர்ந்த இராமகிருஷ்ணன் ஜெயலக்ஷ்மி, போட்டியின் சிறந்த பந்து வீச்சாளருக்கான கிண்ணத்தை அனுஷா சமரநாயக்கவிடமிருந்து பெற்றுக்கொண்டார்




போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான கிண்ணத்தை Dangerous 93 அணியின் அனுர கோம்ஸ், ஃபசல் ஹமீட்டிடமிருந்து பெற்றுக்கொண்டார்

பொ ரளை சீவலி மத்திய மகா வித்தியால ய த்தின் 90ஆவது ஆண்டு நிறைவையிட்டு பழை ய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய் ய ப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி பேஸ்லைன் வீதியிலுள்ள ரயில்வே திணைக் கள மைதானத்தில் அண்மையில் நடைபெற் றது.

இவ்வித்தியாலயத்தின் முன்னாள் மாணவர் களை பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக் கைக்காக ஒன்றுதிரட்டும் நோக்கில் நான்கா வது தடவையாக கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

16 அணிகள் மோதும் இந்த கிரிக்கெட் சுற் றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதி தியாக பொலிஸ் நிர்வாக பிரிவுத் தலைவர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத் திநாயக்க கலந்துகொண்டார். கௌரவ அதிதி யாக முன்னாள் சபாநாயகர் எம்.எச்.மொஹ மத்தின் பேரன் தொழிலதிபர் பசல் ஹமீத் கலந்துகொண்டார்.

கல்லூரி அதிபர் ஜீ.எச்.அநுர, பிரதி அதிபர் லியனகே மிலிந்த, பிரதி அதிபர் காந்தி களு ஆராச்சி மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் கலந்துகொண்ட இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் Golden Legends Eagles 50 to 90 அணி சம்பியன் பட்டத்தை வென்றது. Dangerous 93 அணி ரன்னர் அப் ஆனது, மூன்றாவது இடத்தை Super Guns 2015 அணி பெற்றது.

இறுதிப் போட்டியில் Dangerous 93 அணிக் கும் Golden Legends Eagles 50 to 90 அணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய Golden Legends Eagles 50 to 90 அணி 05 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 32 ஓட்டங் களை பெற்றது. Dangerous 93 அணியால் 5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 26 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. அதன்படி Golden Legends Eagles 50 to 90 அணி 05 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. Dangerous 93, Super Guns 2015, Golden Legends Eagles 50 to 90, Super Guns 2015

★ **சுற்றுப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் அனுரா கோமஸ் (Dangerous 93 அணி)**

★ **சுற்றுப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீராங்கனை சந்தியா (Dangerous 93 அணி)**

★ **சுற்றுப்போட்டியின் சிறந்த பந்து வீச்சாளர் சமிந்த சில்வா (Golden Legends Eagles 50 to 90 அணி)**

★ **சுற்றுப்போட்டியின் சிறந்த பந்து வீச்சா ளர் இராமகிருஷ்ணன் ஜெயலக்ஷ்மி (Golden Legends Eagles 50 to 90 அணி)**

★ **இறுதிப்போட்டியின் நாயகன் சந்தன தனபால (Golden Legends Eagles 50 to 90 அணி)**

★ **போட்டியின் நாயகன் சந்தன தனபால (Golden Legends Eagles 50 to 90 அணி)**

இலங்கை கிரிக்கெட்டின் மென்பந்து நடுவர் கள் ஹசித பெரேரா, எம்.ஏ.எம்.பாயிஸ் மற்றும் ஓசன் இஷாங்கா சுற்றுப்போட்டியின் நடுவர்க ளாக செயற்பட்டனர்.

ஒவ்வொரு போட்டியின் முடிவிலும் போட்டி யின் நாயகனுக்கான விருது வழங்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து பயிற்சியாளருமான அனுஷ சமரநாயக்க அதிபர் ஜி.எச்.அனுர, பிரதி அதிபர் லியனகே மிலிந்த மற்றும் பசல் ஹமீத் ஆகியோர் கலந்துகொண்டனர்.




போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் கிண்ணத்துக்கான விருதை Dangerous 93 அணியின் சந்தியா மல்காந்தி குமாரி, அதிபர் ஜீ.எச். அனுரவிடமிருந்து பெற்றுக்கொண்டார்



விருந்தினர்கள்




அணிகளின் தலைவர்களுடன் பிரதம விருந்தினர்கள்




இரண்டாம் இடத்தை வென்ற Dangerous 93 அணி




முன்றாம் இடம் Super Guns 2015 அணி




சம்பியன்ஷிப் கிண்ணத்தை பைசல் ஹமீட்டிடமிருந்து, Golden Legends Eagles 50 to 90 அணி தலைவர் சமிந்த சில்வா பெற்றுக்கொண்டார்



பிரதம அதிதியாக பங்குபற்றிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் லலித் பத்திநாயக்கவுக்கு உயர்தர மாணவர் ஒன்றியத்தின் தலைவர் நிமல் சார்மிந்த அணித் தலைவர்களை அறிமுகம் செய்து வைத்தார்



முன்னாள் ஆசிரியர்கள்

# பின்தங்கிய கிராமங்களின் அத்தியாவசிய தேவை "சுதேசி கொஹொம்ப கிராமத்திற்கு சேவை"



இலங்கையின் முதல் தர மூலிகை சவர்க்கார வர்த்தகநாமமான சுதேசி கொஹொம்ப, இலங்கையின் கிராமப்புறங்களுக்கு மிக முக்கியமான தேவைகளை நன்கொடையாக வழங்குவதற்காக அதன் புதிய பெருநிறுவன சமூக பொறுப்புத் திட்டமான (CSR) "சுதேசி கொஹொம்ப கமட்ட சத்காராய" (சுதேசி கொஹொம்ப கிராமத்திற்கு சேவை) திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்த முக்கிய பங்களிப்பை வழங்கும் திட்டமான, "சுதேசி கொஹொம்ப கமட்ட சத்காராய" நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் கட்டமாக, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம, கொஹொம்ப கஹ பெலஸ்ஸவில் அமைந்துள்ள வீரஹெல கனிஷ்ட பாடசாலைக்கு சுத்தமான நீர் வசதியை சுதேசி கொஹொம்ப நிறுவனம் நன்கொடையாக வழங்கியது. இது இலங்கையின் கிராமப்புற சமூகத்தில் ஒரு பிரச்சினையாக காணப்படும் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையை நிவர்த்தி செய்துள்ளது.

சுதேசியின் செயற்திட்டத்தின் தலைவியான திருமதி அமரி விஜயவர்தன இது பற்றித் தெரிவிக்கையில், "ஒரு முழுமையான உள்நாட்டு நிறுவனம் எனும் வகையில், இலங்கையின் எதிர்கால சந்ததியினர் தங்களது வாழ்க்கை முறையை மேம்படுத்தவும், ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான புதிய தலைமுறையை உருவாக்கவும் உதவ வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்" என்றார்.

கொஹொம்ப கஹ பெலஸ்ஸ வீரஹெல கனிஷ்ட பாடசாலையின் அதிபர் இது தொடர்பில் தெரிவிக்கையில், "சுதேசி கொஹொம்பவின் இந்த முயற்சியை நாம் பாராட்டுகிறோம். எமது குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்கும் இது போன்ற திட்டங்கள் விலைமதிப்பிட முடியாதவையாகும்." என்றார்.




# ஜனாதிபதிக்கு பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் வாழ்த்து




இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பபட்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவிற்கு இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் (Planters' Association of Ceylon PA) தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், பெருந்தோட்டத் துறையில் நிலையான வளர்ச்சி மற்றும் வாழ்வாதார வலுவூட்டலைப் பெறுவதற்கு புதுப்பிக்கப்பட்ட ஒத்துழைப்பிற்கும் அழைப்பு விடுத்துள்ளது.

நிலையான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் பயிர் பல்வகைப்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் முக்கியமான கொள்கை வகுப்பில் பங்குதாரர்களின் ஈடுபாட்டிற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கான உருமாறும் சகாப்தத்தை ஆரம்பிக்குமாறு சம்மேளனம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் அழைப்பு விடுத்துள்ளது. அனைத்து பங்குதாரர்களையும் தீவிரமாக ஈடுபடுத்துவதன் மூலம், தோட்டத் துறையின் நீண்டகால நம்பகத்தன்மை மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் ஒரு விரிவான கொள்கை கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க முடியும்.

"புதிய தலைமைத்துவத்தின் கீழ், ஒத்துழைப்பு முயற்சிகளினால் தற்போது நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இலங்கையின் வனப்பகுதித் தொழிலின் முழுமையான சாத்தியத்தைத் திறக்கவும் உதவும் என்று முதலாளிமார் சம்மேளனம் நம்பிக்கை கொண்டுள்ளது," என சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் லலித் ஒபேசேகர தெரிவித்தார். "நாங்கள் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் செழிப்புக்கான முன்னோக்கிய கொள்கைகளை செயல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க உறுதியாக உள்ளோம். பன்மயப்படுத்தல் மற்றும் நவீனமயம் போன்ற முக்கிய பகுதிகள் வளர்ச்சியடைய அரசாங்கத்தின் வலுவான ஆதரவைப் பெற வேண்டும்." என்றும் அவர் கூறினார்.

வனப்பகுதித் தொழில் தற்போது கவனம் செலுத்த வேண்டிய குறிப்பிடத்தக்க சவால்களையும் தீவிர நடவடிக்கைகளையும் எதிர்கொள்கிறது. ஒரு முக்கிய அக்கறை பன்மயப்படுத்தலுக்கான அவசர தேவையாகும். சந்தை செயற்பாடுகள் மாறும்போது, பிற பயிர்களை வளர்க்கும் திறன் அதிகரித்து வருகிறது.

இருப்பினும், சமீபத்திய கொள்கை தடைகள் இந்த துறைகளில் முன்னேற்றத்தைத் தடுத்து, துறையின் வளர்ச்சிக்கான சாத்தியத்தை குறைத்துள்ளன. பன்மயப்படுத்தலுக்கான ஆதரவு சூழலை வளர்ப்பதன் மூலம், அரசாங்கம் வனப்பகுதித் தொழிலின் நெகிழ்ச்சித் தன்மையை மேம்படுத்தி, தேசிய பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பை வலுப்படுத்த முடியும்.

# இலங்கை இரத்தினக்கல், ஆபரண சங்கம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவிப்பு

நாட்டின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் உயர் அமைப்பான, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA), பெருமையுடனும் மரியாதையுடனும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9ஆவது ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ஜனாதிபதிக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

எதிர்கால சந்ததியினருக்கான செழுமையான பாரம்பரியத்தை பேணியவாறு, உலகளாவிய அங்கீகாரத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட புத்தாக்கம் மற்றும் நிலைபேறான தன்மை ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிற்துறையை வலுவூட்டுவதை SLGJA நோக்காகக் கொண்டுள்ளது. இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறையை, நெறிமுறை நடைமுறைகள் மூலம் வழிநடாத்தி, சந்தைக்கான அணுகலை எளிதாக்கி, நிலைபேறான ஆதாரங்களை வழங்கும் இச்சங்கம், இத்தொழில்துறையின் தொடர்ச்சியான வளர்ச்சி, உலகளாவிய போட்டித்திறன் மற்றும் சமூகப் பொருளாதாரப் பங்களிப்பிற்கான திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை வழிநடாத்திச் செயற்படும் SLGJA சங்கமானது, தொழில்துறை தொடர்பான பிரச்சினைகளை அரசாங்கம் மற்றும் தொடர்பான ஏனைய உரிய நிறுவனங்களிடம் கொண்டு செல்கிறது. SLGJA ஆனது, FACETS Sri Lanka சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியின் ஏற்பாட்டாளராக 31 ஆண்டுகளுக்கும் மேலாக விளங்கி வருகின்றது. இச்சங்கமானது, ஒத்துழைப்பு, புத்தாக்கம், சர்வதேச கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதன் மூலம் தற்போது தொழில்துறையில் செயற்பட்டு வருவோருக்கு ஒரு அடித்தளமாக இருந்து வருகின்றது.

இலங்கையின் செழுமையான கலாசார பாரம்பரியம் மற்றும் பொருளாதார பலத்தின் ஒரு அங்கமாக மிக நீண்ட காலமாக இருந்துவரும் ஒரு தொழில்துறை எனும் வகையில், ஜனாதிபதியின் தொலைநோக்கு ரீதியான தலைமைத்துவத்தின் கீழ், எமது நாடு தொடர்ச்சியாக செழித்து, பரந்துபட்ட புதிய உச்சங்களை எட்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

முன்னேற்றம், தேசிய ஒற்றுமை, அனைத்து இலங்கையர்களின் நல்வாழ்வு தொடர்பில் ஜனாதிபதி கொண்டுள்ள அர்ப்பணிப்பானது, நாட்டின் அடையாளம் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டின் அடித்தளமாக விளங்கும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் மதிப்புகள் மற்றும் அபிலாஷைகளுடன் இணைந்து செல்கின்றது.

ஜனாதிபதி மற்றும் அவர் வகிக்கும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் தேர்தலுக்கு முன்னர் அறிவார்ந்த ரீதியிலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இக்கலந்துரையாடல்கள் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறை எதிர்கொள்ளும் மாறுபட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளைப் புரிந்துகொண்ட கட்சி எனும் வகையிலும், ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் மீதும், இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறை ஒளிமயமான எதிர்காலம் குறித்தும் மிகுந்த நம்பிக்கையை அளித்துள்ளது.



# மெர்கன்டைல் கைப்பந்து சம்பியன்ஷிப் 2024 இல் சூப்பர் லீக் பட்டத்தை வென்ற Ocean Lanka




இலங்கையின் முன்னணி நெசவுத் துணி உற்பத்தியாளரும், மெர்கன்டைல் கைப்பந்து சம்பியன்ஷிப் 2024 தொடரின் பெருமைமிக்க தங்க அனுசரணையாளருமான Ocean Lanka (Pvt) Ltd நிறுவனம், அண்மையில் மஹரகமவில் உள்ள இளைஞர் மையத்தின் உள்ளக விளையாட்டரங்களில் நடந்து முடிந்த கைப்பந்துப் போட்டியில் வெற்றியை பதிவு செய்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. நிறுவனத்தின் ஆடவர் கைப்பந்துக் குழுவானது, ஒப்பிட முடியாத திறமையையும், அசைக்க முடியாத உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியதோடு, மலிபன் நிறுவன குழுவை 31 எனும் செட் கணக்கில் தோற்கடித்து, சூப்பர் லீக் பட்டத்தை கைப்பற்றியது.

அணியின் முகாமையாளரும், Ocean Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் ஊழியர் தொடர்புகள் மற்றும் நிர்வாக முகாமையாளரும் அணி முகாமையாளருமான ருவன்சிறி மல்லிகாராச்சி இது பற்றித் தெரிவிக்கையில், "எமது கைப்பந்து அணியின் முக்கிய சாதனை தொடர்பில் நாம் மிகவும் பெருமை அடைகிறோம். இந்த வெற்றி அவர்களின் ஒப்பிட முடியாத திறமையை வெளிப்படுத்துகிறது. இந்த சம்பியன்ஷிப் வெற்றியின் உச்ச கட்டத்தை அடைய, போட்டித் தொடர் முழுவதுமான அவர்களது அர்ப்பணிப்பு, குழு ரீதியான செயற்பாடு, திடமான மனப்பான்மை ஆகியன உதவின. இது உண்மையில் அவர்களது திறமையை வெளிப்படுத்தியதோடு மாத்திரமல்லாது, அவர்கள் இப்போட்டித் தொடரின் ஒவ்வொரு போட்டியிலும் ஒற்றுமை, உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் காட்டியது. இங்கு அணியின் செயற்பாடானது விசேடத்துவமாக அமைந்திருந்தது. அத்துடன் அவர்கள் நம்பமுடியாத திறமை மற்றும் துல்லியத் தன்மை மூலம், ஆரம்பம் முதல் இறுதி வரை தங்கள் எதிரணி மீது ஆதிக்கம் செலுத்தினர். அவர்களது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு இந்த வெற்றி ஒரு சான்றாகும் என்பதோடு, நாம் அனைவரும் அவர்களது திறமை தொடர்பில் பெருமையடைகிறோம்." என்றார்.

Ocean Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் ஆடவர் கைப்பந்து அணியின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த வரலாற்று வெற்றியைப் பெறுவதில் முக்கிய பங்கு வகித்தனர். அவர்களது சக்திவாய்ந்த அடித்தாடல்கள், உத்தியான தடுத்தாடல்கள் மற்றும் விளையாட்டில் இடைவிடாத கவனம் ஆகியன இந்த கடுமையான போட்டியில் முன்னேற உதவின.

2024 மெர்கன்டைல் கைப்பந்து சம்பியன்ஷிப்பில் தனது கைப்பந்து அணி உறுப்பினர்கள் முன்னெடுத்த ஒப்பிட முடியாத செயற்றிறனுக்காக பெற்ற கௌரவிப்பு தொடர்பில் Ocean Lanka (Pvt) Ltd நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது. அந்த வகையில் இத்தொடரில் பனீத் ஜயசிங்க தனது சக்திவாய்ந்த மற்றும் துல்லியமான அடித்தாடல்களுக்காக Best Spiker விருது பெற்றார். அதே நேரத்தில் அஷேன் சுமியுரு அவரது தொடர்ச்சியான மற்றும் நம்பகமான பந்து செலுத்தல்களுக்காக Best Receiver விருது பெற்றார். ஷானுக பெரேராவின் தற்காத்தல் திறமைக்காக அவருக்கு Best Blocker விருதைப் பெற்றார். மலீஷ ஜயவர்தனவின் வியூக ஆட்டம் மற்றும் துல்லியமான ஆரம்ப பந்து அனுப்பல் திறமைக்காக Best Setter விருதைப் பெற்றார்.

# குழந்தை பராமரிப்பின் தரத்தை உயர்த்த இணையும் Baby Cheramy மற்றும் காசல் பெண்கள் மருத்துவமனை



இலங்கையிலுள்ள பெண்களுக்கான முதன்மையான மருத்துவமனையான காசல் வீதி பெண்களுக்கான மருத்துவமனையில், தமது திட்டமொன்றின் முதல் கட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ததை அறிவிப்பதில் பேபி செரமி மகிழ்ச்சி அடைகிறது. மருத்துவமனைக்கு பெற்றோர் வருகை தரும்போது மிகவும் வசதியான மற்றும் இனிமையான அனுபவத்தை உணர்வதை உறுதி செய்யும் நோக்கத்துடன், மருத்துவமனை வளாகம் முழுவதும் விரிவான மற்றும் தகவல் தரும் அறிவிப்பு பலகைகளை நிறுவி, முக்கியமான பாதை வழிகாட்டல் உதவிகளை பேபி செரமி இங்கு வழங்கியுள்ளது.

நாட்டிலுள்ள மூன்று பிரதான மொழிகளில், தெளிவான மற்றும் சுருக்கமான தகவல்களைக் கொண்டு, வருகை தருவோருக்கு சிறந்த அனுபவத்தை இப்பெயர்ப் பலகைகள் வழங்குவதோடு மட்டுமல்லாமல், குழந்தை பராமரிப்பு மற்றும் நோயாளியின் சுகவாழ்வு தொடர்பான அத்தியாவசிய வழிகாட்டல்களை வழங்குவதை உறுதிப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, பாலூட்டும் பயிற்சிப் பிரிவு மற்றும் கல்வியூட்டல் அறைகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், தாய்ப்பால் ஊட்டும் உத்திகள் மற்றும் பிரசவத்திற்கு முந்தைய, மகப்பேற்றின் போதான, பிரசவத்திற்குப் பிந்தைய நிலைமைகளின் போதான சிறந்த பராமரிப்பை ஊக்குவிப்பதற்கான அறிவூட்டல்களை வழங்குவது தொடர்பான பேபி செரமியின் உறுதிப்பாட்டை இது மேலும் வலியுறுத்துகிறது. குழந்தை பராமரிப்பு மற்றும் நோயாளியின் சுகவாழ்வு தொடர்பான முக்கிய தகவல்களை திறம்பட வழங்குவதே இந்த முயற்சிகளின் நோக்கமாகும்.

இதனை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த Hemas Consumer Brands சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷியான் ஜயவீர, "எமது சுகாதாரத் துறையும் இந்த வைத்தியசாலையும் நாட்டிற்கு சிறந்த சேவையை வழங்குவதுடன், அவர்களது அர்ப்பணிப்பு முயற்சிகளுக்கு நாட்டின் குடிமக்கள் சார்பில் எமது ஆதரவை வழங்குவதில் நாம் பெருமையடைகிறோம்.

# இலங்கை ஆடைத் தொழில்துறை எதிர்கொள்ளும் சவால்களும் வாய்ப்புகளும்

448 மில்லியனுக்கும் அதிகமான நுகர்வோரைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் (European Union), இலங்கையின் ஆடை ஏற்றுமதிக்கான முக்கிய இடமாக எப்போதும் இருந்து வருகிறது. உயர்தர மற்றும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்ட ஆடைகளுக்கு பெயர் பெற்ற இலங்கை இப்போட்டித் துறையில் வலுவான இடத்தைப் பெற்றுள்ளது.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நிலைத்தன்மை மற்றும் லேபிளிடல் நிபந்தனைகள் இலங்கையில் உள்ள ஆடை உற்பத்தியாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதோடு, சவால்களையும் ஏற்படுத்துகின்றன. இந்த சிறப்புக் கட்டுரை மாறிவரும் ஒழுங்குமுறை நிலப்பரப்பு, இலங்கையில் உள்ள நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இந்த மாற்றங்களுக்கு இணங்குவதன் நன்மைகள் ஆகியவற்றை ஆராய்கிறது.



உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில், குறிப்பாக சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் அதிகமாக இருக்கும் ஆடைத் துறையில், நிலைத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் கண்டறியும் தன்மை ஆகியவற்றை ஊக்குவிப்பதில் ஐரோப்பிய ஒன்றியம் முன்னணியில் உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆடை ஒழுங்குமுறையானது டிஜிட்டல் தயாரிப்பு கடவுச்சீட்டு (Digital Product Passport) முன்முயற்சி மற்றும் ஜேர்மன் விநியோகச் சங்கிலி கண்காணிப்புச் சட்டம் போன்ற ஒழுங்குமுறைகள், இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை தரநிலைகளை பூர்த்தி செய்து உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த ஒழுங்குறையானது டிஜிட்டல் தயாரிப்பு கடவுச்சீட்டுக்கு மாற்றப்பட்டது ஒரு முக்கிய மாற்றமாக விளங்குகிறது. இதன்படி 2027 ஆம் ஆண்டுக்குள் ஐரோப்பிய ஒன்றியத்தில் விற்பனை செய்யப்படும் அனைத்து ஆடைத் தயாரிப்புகளும் QR குறியீட்டைக் கொண்டிருக்க வேண்டும், இது தயாரிப்பின் தோற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த விரிவான தகவல்களை வழங்கிறது. வாடிக்கையாளர் தங்களின் கொள்முதல் குறித்த அதிக வெளிப்படைத்தன்மையை கோருவதால், இந்த நடவடிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலையான நுகர்வுக்கான முயற்சியுடன் ஒத்துப்போகிறது.

# "தீவா கரத்திற்கு வலிமை" திட்டம் மத்திய மாகாணத்தில் ஆரம்பம்

'தீவா கரத்திற்கு வலிமை' தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவைப் பராமரிப்பு வர்த்தகநாமமான Diva (தீவா) மற்றும் Women in Management (WIM) ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஒத்துழைப்புத் திட்டமாகும். மத்திய மாகாணத்திலுள்ள 100 இற்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோரின் பங்குபற்றுதலுடன், WIM இன் தலைவர் Dr. சுலோச்சனா சிகேராவினால், உலக தொழில்முனைவோர் தினத்தை முன்னிட்டு, அண்மையில் மாத்தளை பிரதேச செயலகத்தில் ஒரு நாள் கருத்தரங்கொன்று முன்னெடுக்கப்பட்டது. இக் கருத்தரங்கைத் தொடர்ந்து, பெண் தொழில்முனைவோரின் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் தொழில் முனைவோர் திறன் குறித்த நடைமுறை அனுபவத்தை வழங்க இரண்டு நாள் பயிலரங்கமும் நடத்தப்படவுள்ளது.



மிகவும் சவால் மிக்க தொழில்முனைவோர் உலகில், பெண்களை திறன்கள், அறிவு, தன்னம்பிக்கையுடன் முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்ட, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மிகவும் வெற்றிகரமான தொடரான தீவா கரத்திற்கு வலிமை திட்டத்தின் ஒரு பகுதியாக இது அமைகின்றது.

2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'தீவா கரத்திற்கு வலிமை' திட்டமானது, பெண்களிடையே காணப்படும் மனநிலையை மாற்றியமைத்து, அவர்கள் வெறுமனே உற்பத்தியாளர்களாக அன்றி வெற்றிகரமான தொழில்முனைவோராக பரிணமிக்க உதவுகிறது. வணிகத்தை பதிவு செய்தல், நிதி முகாமைத்துவம், விலை நிர்ணய உத்தி, வாடிக்கையாளர் பராமரிப்பு, டிஜிட்டல் சந்தைகள், சந்தைப்படுத்தல், வர்த்தக நாம பிரபலப்படுத்தல், பொதியிடல் போன்ற பல அத்தியாவசிய விடயங்களை இந்தத் திட்டம் உள்ளடக்கியுள்ளது. இந்த முக்கிய விடயங்களை தமது வணிகத்தில் இணைப்பதன் மூலம், பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், பெண்கள் தமது பொருளாதார நிலமைகளை கையாள தீவா வலுவூட்டுகிறது.

# கமிந்துவின் 75 ஆண்டு சாதனையுடன் இலங்கை அணி இமாலய ஓட்டங்கள்

## டொன் பிரட்மனுடன் சாதனைப் பட்டியலில் இணைந்தார்



கமிந்து மெண்டிஸ் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் கடந்த 75 ஆண்கஙளில் வேகமாக 1000 ஓட்டங்களைப் பெற்றவராக படைத்த சாதனையுடன் நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் இமாலய ஓட்டங்களைப் பெற்றது.

இதன்போது கமிந்து மெண்டிஸ் ஆட்டமிழக்காது 182 ஓட்டங்களைப் பெற்றதொடு அதில் அவர் தனது 13 ஆவது இன்னிங்ஸிலேயே 1000 டெஸ்ட் ஓட்டங்களை அடைந்தார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் வேகமாக ஆயிரம் ஓட்டங்களை பெற்றவர்கள் வரிசையில் அவர் அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் டொன் பிரட்மனுடன் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துகொண்டார்.

இதன் முதல் இடங்களில் 12 இன்னிங்ஸ்களில் 1000 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் ஹெர்பட் சட்கிளிப்ட் (1925 இல்), மேற்கிந்திய தீவுகளின் எவர்டன் வீக்ஸ் (1949) உள்ளனர்.

காலியில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று 306 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணிக்கு கமிந்து மெண்டிஸ் மீண்டும் ஒருமுறை அபாரமாக செயற்பட்டார். தனது 5அவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்த அவர் குசல் மெண்டிஸுடன் இணைந்து 6ஆவது விக்கெட்டுக்கு பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 200 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இதன்போது குசல் மெண்டிஸ் தனது 10 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். 149 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 6 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களைப் பெற்றார்.

மறுபுறம் கமிந்து மெண்டிஸ் தனது 182 ஓட்டங்களைப் பெறுவதற்கு 250 பந்துகளுக்கு முகம்கொடுத்து 16 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களை பெற்றார். இந்நிலையில் இலங்கை அணி 163.4 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 602 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

தொடர்ந்து நேற்று தேநீர் இடைவேளைக்குப் பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி ஆட்ட நேர முடிவின்போது 14 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அசித்த பெர்னாண்டோ மற்றும் பிரபாத் ஜயசூரிய தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.

## சர்வதேச செய்திகள்



# இஸ்ரேலின் தாக்குதல்களில் லெபனானில் பலி 700ஐ தாண்டியது: தொடர்ந்து மோதல்

## போர் நிறுத்தம் பற்றி நெதன்யாகு முன்னுக்குப் பின் கருத்து

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் நிறுத்தம் ஒன்று தொடர்பில் முன்னுக்குப் பின்னான கருத்துக்களைக் கூறிவரும் நிலையில் லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு ஹிஸ்புல்லா அமைப்பு பதில் தாக்குதல்களை நடத்துகின்றன.

இந்நிலையில் அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள் விடுத்த மூன்று வார போர் நிறுத்த அழைப்பு தொடர்பிலான எதிர்பார்ப்பு குறைந்து வருகிறது. ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க வொஷிங்டன் சென்றிருக்கும் நெதன்யாகு, போர் நிறுத்தத் திட்டம் தொடர்பில் இஸ்ரேல் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, போர் நிறுத்தம் பற்றிய செய்தி உண்மையில்லை என்று குறிப்பிட்ட நெதன்யாகு, லெபனான் மீது முழு பலத்துடன் தாக்குதல் நடத்த இஸ்ரேல் இராணுவத்திற்கு உத்தரவிட்டிருந்தார். எவ்வாறாயினும் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சரும், ஹிஸ்புல்லாவுடனான போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழைப்பை நிராகரித்திருந்தார். லெபனான் மீது இஸ்ரேல் நேற்று (27) நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் நான்கு சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளதாக லெபனான் எல்லை நகரான ஷெபாவின் மேயர் முஹமது சாப் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் லெபனானில் இஸ்ரேல் நடத்தி வரும் சரமாரித் தாக்குதல்களில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 700ஐ தாண்டியுள்ளது.

மறுபுறம் லெபனான் எல்லையில் இருந்து சுமார் 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இஸ்ரேலின் ஹைபா நகருக்கு அருகில் உள்ள கிர்யாத் அட்டா மற்றும் டிப்ரியாஸ் நகர் மீது நேற்று ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியதாக ஹஸ்புல்லா குறிப்பிட்டது. லெபனான் கிராமங்கள், நகரங்கள் மற்றும் பொதுமக்கள் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலுக்கு பதிலடியாகவே ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாக அது கூறியது.

ஹிஸ்புல்லா வீசும் ரொக்கெட் குண்டுகளை இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தி வரும் நிலையில் அவை குறைந்த அளவு சேதத்தையே ஏற்படுத்தி வருகிறது. எனினும் ஹிஸ்புல்லா தாக்குதல்கள் வடக்கு இஸ்ரேலில் இயல்பு வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோன்று லெபனானில் இருந்து வந்த நான்கு ஆளில்லா விமானங்களையும் சுட்டு வீழ்த்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது. இதேநேரம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையை இலக்கு வைத்து இஸ்ரேல் மீது மூன்றாவது முறையாக ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியதாக ஈராக்கில் உள்ள இஸ்லாமிய எதிர்ப்பு போராட்டக் குழு தெரிவித்துள்ளது. எனினும் இது தொடர்பில் இஸ்ரேல் தரப்பில் இருந்து எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

சிரிய – லெபனான் எல்லைப் பகுதியில் கடந்த வியாழன் இரவு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஐந்து சிரிய படையினர் கொல்லப்பட்டதாக சிரியாவின் அரச செய்தி நிறுவனமான சானா குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்காதபோதும் ஹிஸ்புல்லாவுக்கு ஆயுதங்கள் செல்வதைத் தடுப்பதற்கு சிரிய–லெபனான் எல்லையில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டது. இஸ்ரேலியப் படை மற்றும் பலம்மிக்க ஹிஸ்புல்லா இடையில் ஏற்பட்டிருக்கும் மோதல் கடந்த 18 ஆண்டுகளில் இரு தரப்புக்கும் இடையே வெடித்துள்ள மிகப்பெரிய மோதலாக மாறியுள்ளது. இது பிராந்தியம் எங்கும் போர் சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் 21 நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் கடந்த புதனன்று (25) அழைப்பு விடுத்ததோடு இது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் போர் நிறுத்த முன்மொழிவு குறித்து இஸ்ரேலிய குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் எதிர்வரும் நாட்களில் தொடர்ந்து இது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்றும் நெதன்யாகு நேற்று கூறியிருந்தார். அமெரிக்காவின் முயற்சியையும் அவர் பாராட்டினார்.

எவ்வாறாயினும் இஸ்ரேலிய அரச தரப்பு மற்றும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் போர் நிறுத்தத்திற்கு எதிரான கருத்துகளையே வெளியிட்டு வருகின்றனர்.

காசா போரையொட்டி சுமார் கடந்த ஓர் ஆண்டாக லெபனான் எல்லையில் ஹிஸ்புல்லாவுடன் மோதல் நீடித்து வரும் நிலையில் எல்லைப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்காக இஸ்ரேலியர்கள் தமது வீடுகளுக்கு திரும்பும் இலக்குடனேயே இந்தத் தாக்குதல்களை நடத்துவதாக இஸ்ரேல் கூறி வருகிறது.

காசாவில் போர் வெடித்ததைத் தொடர்ந்து பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி தொடக்கம் இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது. காசா போர் முடிவுக்கு வந்தேலேயே இஸ்ரேல் மீதான தாக்குதலை நிறுத்துவதாக ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ள நிலையில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் புதிதாக 90,000க்கும் அதிகமான லெபனானியர்கள் வெளியேறி இருப்பதாக ஐ.நா. நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த மோதல் காரணமாக லெபனானில் ஏற்கனவே 111,000 பேர் வரை வெளியேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காசாவில் இஸ்ரேல் மற்றொரு பாடசாலை மீது குண்டு மழை

## அடைக்கலம் பெற்ற 15 பேர் பலி



வடக்கு காசாவில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய புதிய தாக்குதல் ஒன்றில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜபலியா அகதி முகாமில் உள்ள இந்தப் பாடசாலையை தாக்கியதை உறுதி செய்த இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ் போராளிகளை இலக்கு வைத்ததாகக் கூறியது.


கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 36 ஆக பதிவாகியுள்ளது.

ஹப்ஸா அல் பலூஜா பாடசாலையில் இந்தத் தாக்குதலை அடுத்து மீட்புப் பணியாளர்கள் பெரும் கூட்டம் மற்றும் இடிபாடுகளுக்கு மத்தியில் கொல்லப்பட்டவர்களை எடுத்துச் செல்லும் படங்கள் வெளியாகியுள்ளன.

பாடசாலை மீது இரு ஏவுகணைகள் விழுந்ததாகவும் பூகம்பம் போன்று இருந்ததாகவும் குடியிருப்பாளர் ஒருவரான ரமி அப்துல் நபி குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் மக்கள் அடைக்கலம் பெற்ற பாடசாலைகளை இலக்கு வைத்து இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவைச் சாடிய அப்பாஸ்



காசா மீதான இஸ்ரேலின் போரை தொடர்ந்து ஆதரித்து வரும் அமெரிக்காவை கண்டித்த பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் இஸ்ரேலுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தும்படி சர்வதேச சமூகத்தைக் கேட்டுக்கொண்டார்.

'இந்தப் பைத்தியக்காரத்தனம் தொடர்ந்து நீடிக்கக் கூடாது. எமது மக்களுக்கு நடப்பதற்கு ஒட்டுமொத்த உலகமும் பொறுப்பேற்க வேண்டும்' என்று 193 அங்கத்துவ நாடுகள் பங்கேற்றுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் (26) உரையாற்றியபோதே அப்பாஸ் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவைக் கடுமையாக சாடிய அப்பாஸ், காசாவில் பெரும் உயிரிழப்புகள் நிகழ்ந்தபோதும் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் மற்றும் இராஜதந்திர பாதுகாப்பை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

'போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க இஸ்ரேலை வலியுறுத்தும் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை மூன்று முறை தடுத்த உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான அமெரிக்காவுக்காக நாம் வருந்துகிறோம்' என்றார் அப்பாஸ்.

# மதச் சடங்கிற்காக குளித்த 37 பிள்ளைகள் மூழ்கிப் பலி



இந்தியாவின் கிழக்கு இந்து சமய விழா கொண்டாட்டங்களின்போது 37 சிறுவர்கள் மற்றும் ஏழு பெண்கள் உட்பட குறைந்தது 46 பேர் மூழ்கி பலியாகி இருப்பதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் 15 மாவட்டங்களில் இந்த உயிரிழப்புகள் பதிவாகி இருப்பதாக நேற்று (27) செய்தி வெளியானது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நிரம்பிவழிந்த ஆறுகளிலும் குளங்களிலும் மதச்சடங்கு ஒன்றாக குளித்தபோது இவர்கள் உயிரிழந்திருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

3 நாட்களுக்குத் தொடரும் விழா, பிள்ளைகளின் நலனைக் கொண்டாடுகிறது. பிள்ளைகளின் நலனுக்காக அவர்களின் தாய்மார்கள் விரதம் எடுப்பது வழக்கம்.

குளங்களின் நீர்மட்டம் உயர்ந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாமல் பலர் அங்கு குளித்ததாக அதிகாரிகள் கூறினர்.

உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவிவருகிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அரசாங்கம் கூறியது.

அதிக மக்கள் நிரம்பும் மத விழாக்களில் உயிரிழப்புகளை ஏற்படுத்தும் விபத்துகள் இந்தியாவில் அடிக்கடி இடம்பெறுகின்றன. வடக்கு உத்தர பிரதேச மாநிலத்தில் கடந்த ஜூலையில் மத ஒன்றுகூடல் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் குறைந்தது 121 பேர் உயிரிழந்தனர்.

# ஜப்பான் புதிய பிரதமராகிறார் பாதுகாப்பு அமைச்சர் இஷிபா



ஜப்பானின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஷிகெரு இஷிபா நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தொடர் மோசடிக் குற்றச்சாட்டுகளால் பிரதமர் புமியோ கிஷிடா பதவி விலகப்போவதாகக் கடந்த மாதம் அறிவித்திருந்தார். எனவே ஜப்பானின் ஆளும் மிதவாத ஜனநாயகக் கட்சி அதன் தலைமைத்துவத்துக்கான வாக்கெடுப்பை நேற்று (27) நடத்தியது.


முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இம்முறை 9 வேட்பாளர்கள் களத்தில் இறங்கினர். இதில் அவர் பொருளாதார பாதுகாப்பு அமைச்சர் சானா டெய்ச்சியுடனான கடுமையாக இரண்டாவது சுற்று வாக்கெடுப்புக்குப் பின்னரே கட்சி தலைமைக்கான போட்டியில் வெற்றி பெற்றார். முதல் சுற்று வாக்கெடுப்பில் ஒன்பது வேட்பாளர்களில் எவரும் பெரும்பான்மை பெறாத நிலையிலேயே இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு நடந்தது.

உயரும் வாழ்க்கைச் செலவினத்தால் மக்களிடையே அதிகரிக்கும் கோபம், கிழக்காசியாவில் நிலையற்ற பாதுகாப்புச் சூழலைச் சமாளிப்பது ஆகியவற்றை 67 வயதான இஷிபா, பிரதமராகப் பொறுப்பேற்றவுடன் கையாள வேண்டும்.

வாக்கெடுப்பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் இஷிபா கண்ணீர் மல்கப் பேசினார். நியாயமான, பரிவுமிக்க ஜப்பான் உருவாக வேண்டும் என்று அவர் கூறினார்.

ஒக்டோபர் முதலாம் திகதி அவர் பிரதமர் பொறுப்பை ஏற்கவுள்ளார். ஜப்பானில் எதிர்வரும் 2025 ஒக்டோபர் அல்லது அதற்கு முன்னர் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா மீது சீனா குற்றச்சாட்டு



சைபர் தாக்குதல்களின் தோற்றமும் அது தொடர்பிலான மிகப் பெரிய குற்றவாளியும் அமெரிக்கா தான் என்று அமெரிக்காவை சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

வாஷிங்டனில் நடைபெற்ற இணைய உச்சிமாநாட்டின் இணைய ஊடுருவல் தொடர்பில் சீனா மீது அமெரிக்கா குற்றம்சாட்டிய நிலையில் அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமெரிக்காவிலுள்ள சீனத் தூதரகத்தின் பேச்சாளர் லியூ பெங்யு இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இக்குற்றச்சாட்டை நாம் முற்றாக நிராகரிக்கிறோம். சரியான ஆதாரங்கள் இன்றி தேவையற்ற குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா முன்வைக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் இணைய தளங்களை உளவுபார்ப்பதையும் சைபர் தாக்குதல்களை முன்னெடுப்பதையும் அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 28ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.